E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2023 மே 27 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன்

வரு. 91 இல. 124 | Saturday 27, May, 2023 | 10பக்கங்கள் | 50/-

உள்ளூராட்சி அலுவல்கள் தொடர்பான

## ஜனாதிபதியின் ஆலோசகராக ரோஸி சேனாநாயக்க நியமனம்



கொழும்பு மாநகரசபையின் முன்னாள் மேயர் ரோஸி சேனாநாயக்க உள்ளூராட்சி அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஐக்கிய தேசிய கட்சியின் 06

துறைமுகத்திலிருந்து எத்தகைய பொருட்களுக்கும்

## 35 வீத பெறுமதிசேர் வரி அறவிடாது மீள் ஏற்றுமதி செய்யப்படமாட்டாது

இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



நூற்றுக்கு 35 சதவீத பெறுமதிசேர் வரி அறவிடாமல் துறைமுகத்திலிருந்து எத்தகைய பொருட்களும் மீள் ஏற்றுமதி செய்யப்படமாட்டாது. அவ்வாறு இடம்பெறுவதுமில்லையென, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பாக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் முன்வைத்த விடயம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுமென்றும் விசாரணைகள் நடத்தப்பட்டு உரிய பதில் பெற்றுக் கொடுக்கப்படுமென்றும், நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். 06

அமரர் ஜோசப் மைக்கல் பெரேரா

## பாராளுமன்ற ஜனநாயகத்துக்கு கௌரவம் சேர்த்தவர்

அனுதாபப் பிரேரணையில் பிரதமர் தினேஷ்



லோரன்ஸ் செல்வநாயகம்

சபாநாயகராகவும் பல்வேறு அமைச்சுப் பதவிகளையும் வகித்த ஜோசப் மைக்கல் பெரேரா சுயாதீனமாகச் செயற்பட்டு, பாராளுமன்ற ஜனநாயகத்துக்கு கௌரவம் சேர்த்தவரென, பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இதேவேளை, முன்னாள் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தம்மை சபாநாயகராக நியமித்த அரசாங்கத்துக்கு எதிராக தீர்மானங்களை வழங்கி, இலட்சக்கணக்கான அரசாங்க ஊழியர்களின் 06

## 07 மில். மக்களுக்கு உதவும் நோக்கில் 123.5 மில். டொலர் நிதி சேகரிப்பு

ஐ.நா.வின் இலங்கை தொடர்பான வருடாந்த அறிக்கையில் தெரிவிப்பு

United Nations

இலங்கை கடந்தாண்டு மிக மோசமான சமூக, பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்ததுடன், அதன் விளைவாக வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்த 2.9 மில்லியன் மக்களுக்கு அவசியமான உடனடி மனிதாபிமான உதவிகளை தாம் வழங்கியதாகவும் மொத்தமாக 7 மில்லியன் மக்களுக்கு உதவும் நோக்கில் 123.5 மில்லியன் டொலர் நிதி திரட்டப்பட்டதாகவும், ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டில் இலங்கையின் சமூக, பொருளாதார நிலவரம் மற்றும் அதில் நிலவிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கும் ஐக்கிய நாடுகள் 06

இலங்கையில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள

# ஜப்பான் முதலீட்டாளர்களுக்கு ஜனாதிபதி ரணில் அழைப்பு



ஜப்பானுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வியட்னாம் பிரதி பிரதமர் ட்ரான் லூ குவாங்கை சந்தித்து பேச்சு நடத்தினார். இச்சந்திப்பின்போது, இருதரப்பு உறவுகள் மற்றும் கலாசார தொடர்புகளை பலப்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டது.

## டிஜிட்டல் மயமாக்கலின் போது இலங்கை – ஜப்பான் ஒத்துழைப்புகளை மேம்படுத்துவது தொடர்பாக அவதானம்



முதலீட்டாளர்களுக்கு நன்மை பயக்கும் வகையிலான பல்வேறு ஏற்பாடுகளை இலங்கை அண்மைக்காலங்களில் மேற்கொண்டுள்ளதென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

'இலங்கை பொருளாதாரத்தின் மீள் கட்டமைப்பு மற்றும் ஜப்பான் தொழில் வாய்ப்புகள்' என்ற தொனிப்பொருளின் கீழ் டோக்கியோ நகரில் நேற்று (26) நடைபெற்ற வர்த்தக வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை மற்றும் ஜப்பானுக்கிடையிலான வர்த்தக தொடர்புகளை பலப்படுத்தும் நோக்கில் ஜப்பானிலுள்ள இலங்கை வர்த்தக சம்மேளனம் (JETRO) மற்றும் இலங்கை தூதரகம் ஆகியன இணைந்து மேற்படி மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தன.

இலங்கையிலுள்ள புதிய முதலீடுகளுக்கான வாய்ப்புகள் தொடர்பில் தெளிவுபடுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கையின் 06

## புத்தளம் ஆசிரியர் தாக்குதல் 21 மாணவர்களுக்கு பிணை

புத்தளத்தில் ஆசிரியர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 21 மாணவர்களும் நிபந்தனையுடனான பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று இவர்களை புத்தளம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, நீதவான் எஸ்.ஏ.எம்.சீ.சத்துரசிங்ஹ, இவர்களுக்கு பிணை வழங்கினார். இதற்கமைய, 06



அலி சப்ரி ரஹீம் எம்.பி.க்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கவும்

ஆளும், எதிர்க்கட்சியினர் வலியுறுத்து

03

கிழக்கின் அபிவிருத்தி திட்டங்கள்

## இந்தியத் தூதுவருடன் கிழக்கு ஆளுநர் செந்தில் விரிவான கலந்துரையாடல்



இந்தியாவின் உதவித் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே மற்றும் பிரதி உயர்ஸ்தானிகர் ஜேக்கப் ஆகியோருடன் கலந்துரையாடலை நடத்தியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் தற்போதைய இந்திய உதவித் திட்டத்தினூடான வேலைத்திட்டங்கள் மற்றும் எதிர்கால அபிவிருத்திகள் தொடர்பாக இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டன.

கிழக்கிலுள்ள இந்திய நிறுவனங்கள், தமது நலன்புரிக்காக ஒதுக்கப்பட்ட நிதியை கிழக்கிலுள்ள நலிவடைந்த மக்களுக்கு வழங்க இந்தியத் தூதரகம் உதவி செய்ய வேண்டுமென்று இதன்போது ஆளுநர் கேட்டுக்கொண்டார். 06

## கிளிநொச்சியில் கணிசமானளவு காணிகளை விடுவிக்க தீர்மானம்

அமைச்சர் டக்ளஸின் தொடர் முயற்சிக்கு பலன்



கிளிநொச்சி மாவட்டத்தில் வன வளப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றினால் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்பட்டிருந்த கணிசமான காணிகளையும் நீர்ப்பாசனம் மற்றும் நீர்வேளாண்மைக்கு பொருத்தமான குளங்களையும் விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்தமையினால் காடுகளாக மாறியிருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களும் மக்கள் குடியிருப்புகளும் வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தினாலும் 06

எரிபொருள் விலை திருத்தத்துடன்

## QR ஒதுக்கீட்டை அதிகரிக்க தீர்மானம்



எரிபொருளுக்கான QR முறைமையின் கீழ் தற்போது அனுமதிக்கப்பட்ட எரிபொருள் ஒதுக்கீடு அடுத்த மாதம் மேற்கொள்ளப்படவுள்ள எரிபொருள் விலை திருத்தத்துடன் 06

க.பொ.த.

## விடைத்தாள் மதிப்பீட்டு வருகை கொடுப்பனவு ரூ.500 இலிருந்து 2,000 ரூபாவாக அதிகரிப்பு

பிரச்சினை இருப்பின் திறைசேரியுடன் பேசலாம்

– கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த



லோரன்ஸ் செல்வநாயகம்

க.பொ.த. விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டு வந்த 500 ரூபா வருகைக் கொடுப்பனவு 2,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதில் ஏதாவது பிரச்சினைகள் காணப்படுமாயின், திறைசேரியுடன் பேசி அது நிவர்த்திக்கப்படுமென, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். 06

மன்னார் மாவட்டத்தில் அனைத்து

## தனியார் கல்வி நிலையங்களும் மாலை 6 மணியுடன் மூடப்படவேண்டும்

அரசாங்க அதிபர் தலைமையில் அவசர தீர்மானம்

மன்னார் குறூப் நிருபர்



மன்னார் மாவட்டத்திலுள்ள அனைத்து தனியார் கல்வி நிலையங்களின் கல்வி நடவடிக்கைகளும் மாலை 6.00 மணியுடன் நிறைவடைந்து, கல்வி நிலையங்கள் மூடப்பட வேண்டுமென, அம்மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மெல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட தனியார் கல்வி நிலையங்களின் இயக்குநர்களுடனான அவசரக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் (25) மாலை 3.00 மணியளவில் அம்மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் 06



கிழக்கு மாகாணத்தின் குடிநீர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

08

## 20 தேங்காய்கள் திருடியவருக்கு 10 வருட ஒத்திவைக்கப்பட்ட சிறை



இருபது தேங்காய்களை திருடிய ஒருவரை குற்றவாளியாக இனங்கண்ட மினுவாங்கொடை நீதவான் நீதிமன்றம், இவருக்கு 10 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழிய சிறைத்தண்டையை விதித்துள்ளது.

திவுலபிட்டிய, கெஹேல் எல்ல பிரதேசத்திலுள்ள தென்னந்தோட்டமொன்றில் அத்துமீறி புகுந்து 20 தேங்காய்களை இந்த நபர் திருடியுள்ளார். இந்நிலையில், தென்னந்தோட்டத்தில் அத்துமீறி நுழைந்தமை மற்றும் தேங்காய்களை பறித்தமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுகள் இவருக்கு 06

## யாழ். நகரில் வாள்வெட்டுக்குழு அட்டகாசம்; 02 பேர் படுகாயம்

யாழ்.விசேட நிருபர்



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை சிவன் கோயிலுக்கு அருகேயுள்ள பழக்கடைக்குள் புகுந்த வாள் வெட்டுக் குழுவொன்று, அங்கிருந்தவர்கள் மீது வாள் வெட்டுத் தாக்குதலை நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகவும் இதில் 2 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும், யாழ். பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக, பொலிஸார் தெரிவித்துள்ளனர். முன்விரோதம் காரணமாகவே இந்த வாள் வெட்டுத் தாக்குதல் 06

## எரிபொருள் வணிகத்துக்கு மூன்றாம் தரப்பை பயன்படுத்தும் எண்ணமில்லை

சினோபெக் நிறுவனம் திட்டவட்டமாக அறிவிப்பு




இலங்கையில் எரிபொருள் விற்பனை செய்வதற்கு வேறு வெளி நிறுவனங்களை பயன்படுத்துவதாக வெளியான செய்திகள் உண்மைக்கு புறம்பானதென, சீனாவின் சினோபெக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் எரிபொருள் விற்பனை செய்வது தொடர்பாக சீனாவின் சினோபெக் நிறுவனத்துடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதாக அண்மையில் அரசாங்கம் அறிவித்தது. 06

அனைவரும் ஏகமனதாக தெரிவு செய்தால்

## தமிழரசு கட்சியின் தலைமையை ஏற்கத் தயாரென்கிறார் சி.வி.கே



அனைவரும் ஏகமனதாக என்னை தெரிவு செய்தால், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையை ஏற்கத் தயாரென, அந்தக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

சமகால நிலைமைகள் தொடர்பாக நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில், தமிழரசுக் கட்சியின் தலைமை தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். 06

# சர்வதேச செய்திகள்

## வெளிநாடு செல்வதற்கு இம்ரான் கானுக்கு தடை




பாகிஸ்தானை விட்டு வெளியேற அந்த நாட்டின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், அவரது மனைவி உள்ளிட்டோருக்கு தடை விதிக்கப் பட்டுள்ளது.

கடந்த 9 மற்றும் 10ஆம் திகதிகளில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக, இம்ரானின் தெஹ்ரீக்ஏஇன்சாப் கட்சியைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோரை வெளிநாட்டுப் பயணத் தடைப் பட்டியலில் அரசு சேர்த்துள்ளது. இதில் இம்ரான் கானும், அவரது மனைவி புஷ்ராவும் அடங்குவர் என்று பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

“ஒவ்வொரு வழக்கினதும் நிலையான நடைமுறையாக இது உள்ளது. நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு முகம்கொடுக்கும் அனைவரும் நாட்டை விட்டு வெளியேற தடை செய்யப்படுகின்றனர்” என்று அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் தன் மீது பயணத் தடை விதித்ததற்காக அவர் நேற்று அரசுக்கு நன்றி தெரிவித்தார். “நாட்டுக்கு வெளியில் எனக்கு எந்த சொத்தும் அல்லது எந்த வர்த்தகமும் அல்லது வங்கிக் கணக்கு கூட இல்லாத நிலையில் வெளிநாடு செல்ல எனக்குத் திட்டமில்லை” என்று இம்ரான் கான் ட்விட்டரில் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா வாக்கெடுப்பில் தனது பிரதமர் பதவியை இம்ரான் கான் இழந்தார்.

அதன் பின், நாட்டின் பல்வேறு நீதிமன்றங்களில் இம்ரான் கான் மீது 100க்கும் மேற்பட்ட வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

## ஜப்பானில் நால்வர் கொலை: சந்தேகத்தில் ஆடவர் கைது




ஜப்பானில் மிக அரிதான கத்திக் குத்து தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் நான்கு பேர் கொல்லப்பட்ட நிலையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றம்சாட்டப்பட்டிருக்கும் அந்தத் தாக்குதல்தாரி நகானோ மாகாணத்தில் ஒரு பெண் மீது கத்திக் குத்து தாக்குதல் நடத்தி இருப்பதோடு வேட்டை துப்பாக்கி ஒன்றால் இரு பொலிஸார் சுட்டுள்ளார். நான்காவது நபர் ஒருவர் கொல்லப்பட்டிருப்பது பின்னர் உறுதி செய்யப்பட்டுள்ளது.

உள்ளூர் அரசியல்வாதியின் மகனான 31 வயது மசனோரி அவுகி என்பவரே சந்தேக நகர் என்று பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

கடந்த ஆண்டு ஜுலையில் முன்னாள் ஜனாதிபதி ஷின்சோ அபே கொல்லப்பட்டபோதும், ஜப்பானில் துப்பாக்கி வன்முறை மிக அரிதான ஒன்றாகும். ஆடவர் ஒருவர் பெண் ஒருவரை துரத்திச் சென்று கத்தியால் குத்தியதாக உள்ளூர் நேரப்படி கடந்த வியாழன் இரவு பொலிஸாருக்கு ஆரம்பத்தில் முறைப்பாடு கிடைத்துள்ளது.

இந்தத் தாக்குதலுக்கான காரணம் உறுதி செய்யப்படவில்லை. ஏன் அந்தப் பெண்ணை கொன்றாய் என்று அங்கிருந்த ஒருவர் கேட்டதற்கு, “கொல்ல வேண்டும் என்பதால் கொன்றேன்” என்று தாக்குதல்தாரி பதிலளித்திருப்பதாக சம்பவத்தை பார்த்த நபர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து அங்கு வந்த பொலிஸார் மீதும் அந்தத் தாக்குதல்தாரி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார். கொல்லப்பட்ட நான்காவது நபர் வயதான பெண் என்று குறிப்பிடப்பட்டபோதும் அவர் யார் என்பது உறுதி செய்யப்படவில்லை.

ஜப்பானில் துப்பாக்கி வைத்திருப்பவர் கண்டிப்பான சோதனை மற்றும் மனநல சோதனைகளுக்கு முகம்கொடுக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பறவைக் காய்ச்சலால் சிலியில் 9,000 கடல் உயிரினங்கள் பலி



சிலியின் வடக்குக் கடற்கரையில் பரவிய பறவைக் காய்ச்சலால் கிட்டத்தட்ட 9,000 கடல் உயிரினங்கள் இறந்துள்ளன.

கடல் சிங்கங்கள், பென்குவின்கள், நீர் நாய்கள் போன்றவை அவற்றில் அடங்கும் என்று அந்தத் தென்னமெரிக்க நாட்டின் மீன்பிடிச் சேவைத் துறை தெரிவித்தது.

2023ஆம் ஆண்டு ஆரம்பித்து 7,600க்கும் அதிகமான கடல் சிங்கங்கள் சிலியிலும் பெருவிலும் மட்டுமே இனவிருத்தி செய்யும் அதே சமயம் அருகிவரும் ஹம்போல்ட் பென்குவின்கள், டோல்பின்கள் முதலியவை கரையோரத்தில் மடிந்துகிடக்கக் காணப்பட்டன. சிலியின் 16 பிராந்தியங்களில் 12 இல் பறவைக் காய்ச்சல் பரவியுள்ளது. கரையோரத்தில் இறந்திருக்கும் உயிரினங்களின் மூலம் வைரஸ் பரவுவதைத் தடுக்க, அவற்றைப் புதைக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன.

அர்ஜன்டீனா, பிரேசில், பராகுவே, பெரு ஆகியவற்றில் நூற்றுக்கணக்கான கடல் சிங்கங்கள் உயிரிழந்துள்ளன.

## ருவாண்டா படுகொலை குற்றவாளி கயிஷோ கைது




1994 ருவாண்டா இன ப்படுகொலை தொடர்பில் தலைமறைவாகியுள்ள நால்வரில் ஒருவரான புல்ஜன்ஸ் கயிஷோ தென்னாபிரிக்காவில் கைது செய்யப் பட்டுள்ளார்.

“கூட்டு நடவடிக்கை ஒன்றின் மூலம் தென்னாபிரிக்காவின் பார்லில் வைத்து இனப் படுகொலையில் தலைமறைவாகி உலகில் அதிகம் தேடப்படும் நபர்களில் ஒருவரான புல்ஜன்ஸ் கயிஷோ நேற்று (26) கைது செய்யப்பட்டார்” என்று குற்றவியல் தீர்ப்பாயங்களுக்கான மீதமுள்ள சர்வதேச பொறிமுறை கடந்த புதனன்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1994 இல் 100க்கும் அதிகமான நாட்கள் ஹுட்டு கடும்போக்காளர்களின் தாக்குதல்களில் டுட்சி இனத்தவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட சுமார் 800,000 ருவாண்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டிருக்கும் கயிஷோ முன்னாள் பொலிஸ் ஆய்வாளர் ஒருவர் என்பதோடு அவர் மீது இனப் படுகொலை மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றச் செயலில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

அவர் 2001 முதல் தலைமறைவாக இருந்ததாக மேற்படி தீர்ப்பாயம் தனது இணையதளத்தில் தெரிவித்துள்ளது.

## சீனாவில் வெளிநாட்டு நேரடி முதலீடு வீழ்ச்சி




கொவிட் – 19 பெருந்தொற்றுக்கு பின்னர் சீனாவின் பொருளாதாரம் மீட்சி பெற்று வருகின்ற போதிலும் இவ்வருடத்தின் முதல் நான்கு மாதங்களிலும் வெளிநாட்டு நேரடி முதலீடு குறைவடைந்துள்ளது.

சீன வர்த்தக அமைச்சின் தரவுகளின் படி, இவ்வருடம் ஜனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் உண்மையான வெளிநாட்டு நேரடி முதலீடு 73.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியுடன் இதனை ஒப்பிடும் போது இவ்வருடம் 3.3 வீதம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

ஆனால் இவ்வருடத்தின் முதலிரு மாதங்களிலும் 39.71 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டு நேரடி முதலீடாகக் கிடைக்கப்பெற்றுள்ளது. இது கடந்த வருடத்தை விட ஒரு வீத வளர்ச்சியாகும்.

வெளிநாட்டு முதலீட்டின் உண்மையான பயன்பாடானது வெளிநாட்டு நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெறும் பணத்தொகையின் அளவைக் கொண்டு மதிப்பீடு செய்யப்படுகிறது.

## நடுவானில் விமானத்தின் கதவை திறந்தவர் கைது



நடுவானில் பறந்து கொண்டிருந்த விமானத்தின் அவசரக் கதவை திறந்த ஆடவர் ஒருவர் விமானம் தென் கொரியாவில் தரையிறங்கிய பின் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த ஏசியானா ஏர்லைன்ஸ் விமானம் திறக்கப்பட்ட கதவுடன் டேகு சர்வதேச விமான நிலையத்தில் பாதுகாப்பாக தரையிறங்கி இருப்பதோடு விமானத்தில் இருந்த 194 பயணிகளும் உயிர் தப்பியுள்ளனர்.

எனினும் குறைந்தது பாதி டஜன் பேர் மூச்சு பிரச்சினைக்கு முகம்கொடுத்த நிலையில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். 30 வயதுகளில் இருக்கும் ஆடவர் கைது செய்யப்பட்டதாக யொஹப் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த விமானம் உள்ளூர் நேரப்படி நேற்றுக் காலை ஜேஜு தீவில் இருந்து புறப்பட்டுள்ளது. இந்நிலையில் விமானம் தனது பயணத்தை முடிக்கும் நேரத்தில் அதன் கதவு திறக்கப்பட்டிருப்பதாக தென் கொரிய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

விமானத்தின் பக்கவாட்டில் உள்ள இடைவெளி மற்றும் அமர்ந்திருக்கும் பயணிகளின் வரிசைகளில் காற்று வீசுவதை காட்டும் வீடியோ ஒன்று பயணி ஒருவரால் சமூக ஊடகத்தில் பகிரப்பட்டுள்ளது.

வாராந்த விளையாட்டு நிகழ்ச்சி ஒன்றுக்கு பயணிக்கும் பாடசாலை வயது சிறுவர்களும் அந்த விமானத்தில் இருந்துள்ளனர். குழந்தைகள் அதிர்ச்சியில் பயந்து கூச்சலிட்டனர் என்று ஒரு குழந்தையின் பெற்றோர் குறிப்பிட்டுள்ளனர்.

பொலிஸார் முழு விசாரணையை ஆரம்பித்திருப்பதாக ஏசியானா ஏர்லைன்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

## சியரலியோன் அடையாளமான நானூறு ஆண்டு மரம் சாய்ந்தது



சியரலியோன் தலைநகர் பிரீடவுனில் பல நூற்றாண்டுகளாக நிலைத்திருந்த அந்நாட்டின் தேசிய சொத்தான பருத்தி மரம் ஒன்று கடும் மழை காரணமாக சாய்ந்துள்ளது.

கடந்த புதன்கிழமை (24) இரவு இடம்பெற்ற கடும் மழையால் அந்த மரம் விழுந்தது என்று ஜனாதிபதி ஜூலியஸ் மாடா பயோ தெரிவித்துள்ளார். இது தேசத்துக்கு பெரும் இழப்பு என்றும் அவர் வர்ணித்துள்ளார்.

ஆரம்ப குடியேறிகளின் சுதந்திரத்தின் அடையாளமாக இந்த மரம் இருந்தது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த மரம் சியரலியோன் பணத்தாளிலும் இடம்பெற்றுள்ளது.

எனினும் இந்த மரம் மந்திரத்திற்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறி அதன் அழிவை சில கிறிஸ்தவர்கள் வரவேற்றுள்ளனர்.

ஒரு வாரத்திற்கு முன்னர் ஏற்பட்ட கடும் மழையால் மரத்தின் கிளைகள் உடைந்து விழுந்தபோதும் அந்த மரம் தப்பியது. எனினும் புதனன்று ஏற்பட்ட மற்றுமொரு கடும் மழையில் ஒட்டுமொத்த மரமும் விழுந்து மரத்தின் கீழ் பாகம் மாத்திரம் எஞ்சியுள்ளது. இதனால் அந்த நகரின் அமைப்பே மாறி இருப்பதாக மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

230 அடி உயரம் கொண்ட அந்த பருத்தி மரம் அந்நாட்டின் மிக வயதான பருத்தி மரம் என்று நம்பப்படுகிறது. அது 400 ஆண்டு வயது கொண்டது என்று அரசு குறிப்பிடுகிறது.

அமெரிக்காவில் இருந்து திரும்பிய ஆபிரிக்க அடிமைகளால் இந்த மரத்தை கண்டுபிடித்ததாகக் கூறப்படுகிறது. 1700களில் இவ்வாறு படகுகள் மூலம் வந்தவர்கள் இந்த மரக் கிளையின் கீழ் ஒன்றுகூடி பிரீடவுன் என்று அழைத்த தமது புதிய நகருக்காக பிரார்த்தித்ததாக உள்ளூர் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

அமெ. பாராளுமன்ற தாக்குதல்

## கிளர்ச்சி தலைவர் ரோட்ஸுக்கு 18 ஆண்டுகள் சிறை தண்டனை



அமெரிக்க பாராளுமன்றக் கட்டடத்தின் மீது இரண்டு ஆண்டுகளுக்கு முன் நடத்தப்பட்ட தாக்குதலுக்காக, வலசாரி ஓத் கீபர்ஸ் கிளர்ச்சி அமைப்பின் தலைவருக்கு 18 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் தொடர்பில் 1,000க்கும் அதிகமானோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கிளர்ச்சி அமைப்பின் தலைவர் ஸ்டுவர்ட் ரோட்ஸுக்கு ஆயுதமேந்திய தமது குழுவை, பாராளுமன்றக் கட்டடத்தின் மீது தாக்குதல் நடத்த உத்தரவிட்டதற்காகத் தண்டனை விதிக்கப்பட்டது.

ஜோ பைடன் ஜனாதிபதி பொறுப்பை ஏற்பதைத் தடுக்கத், தேவையிருந்தால் வன்முறையைப் பயன்படுத்தவும் ரோட்ஸ் தமது ஆதரவாளர்களுக்கு உத்தரவிட்டதாகக் கூறப்படுகிறது.

இதுவரை அந்தத் தாக்குதல்களின் தொடர்பில் விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையில் அவருக்கான சிறைவாசம் மிக நீளமானதாகும்.

ஏற்கனவே இந்தக் குற்றச்சாட்டில் புளோரிடா செப்டர் என்ற குழுவின் தலைவர் கெல்லி மெக்கிற்கு 12 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

டொனால்ட் டிரம்ப் தோல்வியை சந்தித்த 2020 ஜனாதிபதி தேர்தலின் முடிவை நிராகரித்து அவரது ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் பாராளுமன்ற கட்டடத்தின் மீது தாக்குதல் நடத்தினர்.

இது தொடர்பில் 1,000க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்ட நிலையில் பாதிக்கும் அதிகமானவர்கள் மீது தாக்குதல், திருட்டு, ஆயுத குற்றச்சாட்டுகள், அத்துமீறி நுழைந்து உத்தியோகபூர்வ செயற்பாடுகளுக்கு இடையூறு செய்தது என்ற குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன.

சுமார் 80 பேர் வரை வழக்கு விசாரணையில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக அமெரிக்க நீதித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444, 0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 மே 27 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.32 |
| லுஹர் | 12.09 |
| அஸர் | 03.34 |
| மஃரிப் | 06.22 |
| இஷா | 07.38 |

**இன்றைய சுபதினம்**

சோபகிருது வருடம் வைகாசி 13

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

# 52,000 ஆசிரியர்களை நியமிக்கும் நடவடிக்கை துரிதப்படுத்தப்படும்

## சட்டமா அதிபரினூடாக நீதிமன்றத்தின் அனுமதியை பெறவும் நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



52,000 பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்படுமென்பதுடன், அது தொடர்பான நீதிமன்றத்தின் தடையுத்தரவை நீக்கி அவர்களுக்கான பரீட்சையை நடத்துவதற்கு சட்டமா அதிபரினூடாக நீதிமன்றத்தின் அனுமதியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப் போவதாகவும், கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இதேவேளை, கல்வியியல் கல்லூரிகள் மூலமாக ஆசிரியர்களை நியமிக்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் ஜூலை 15ஆம் திகதி மேற்கொள்ளப்படவுள்ளதுடன், அவ்வாறு 7,500 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்களெனவும், அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்த அமைச்சர்,

"கடந்த ஒரு மாத காலமாக அரசாங்கப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் 06

# அதிபர், ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்

## கல்வி அமைச்சரிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாடளாவிய ரீதியில் நிலவும் 35 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் மற்றும் 5,000 அதிபர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அத்துடன், நாடளாவிய ரீதியிலுள்ள அரசாங்கப் பாடசாலைகளில் 5,000 க்கும் மேற்பட்ட அதிபர் வெற்றிடங்கள் நிலவுவதுடன், கல்வி நிர்வாக சேவையில் சுமார் 500 வெற்றிடங்கள் தற்போது நிலவுவதாகவும், அவர் தெரிவித்தார். இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் கல்வி அமைச்சரிடம் அவர் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து, அது தொடர்பாக கேள்வியெழுப்பிய போதே, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், 2,500 பதில் அதிபர் தொடர்பான பிரச்சினைகளும் காணப்படுகின்றன. அது தொடர்பாகவும் கவனம் செலுத்துமாறும் கல்வி அமைச்சரிடம் அவர் கேட்டுக்கொண்டார்.

சிறந்த கல்வியை நாட்டிலுள்ள மாணவர்களுக்கு உரிய வகையில் பெற்றுக்கொடுப்பதை உறுதிப்படுத்துவதற்கு மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மிக விரைவில் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும், அவர் கேட்டுக்கொண்டார்.



சுற்றாடல் அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்டுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்குமிடையில் நேற்று முன்தினம் (25) காலை கொழும்பில் சிநேகபூர்வ சந்திப்பொன்று நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இன்னோரன்ன விடயங்கள் தொடர்பாக இருவரும் கலந்துரையாடினர்.

# அமரர் ஆறுமுகம் தொண்டமானின் கனவுகள் ஒருநாள் நிச்சயம் நிறைவேறும்

## மூன்றாண்டு நினைவு நாளையிட்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு



என் உற்ற நண்பன் ஆறுமுகன் தொண்டமான். இம்மண்ணை விட்டகன்று மூன்றாண்டுகளாகிவிட்டன. என்னோடு ஒன்றாக இருந்து, தன் மக்கள் விடிவுக்காய் கலந்துரையாடிச் சென்ற சில நிமிடங்களில் அவரது மரணச் செய்தி கேட்டு திகைத்துப் போனேன். இன்றுவரை அந்த அதிர்ச்சி என்னை விட்டகலவில்லையென, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரும் பொதுச் செயலாளரும் முன்னாள் சிரேஷ்ட அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமானின் மூன்றாண்டு நினைவு நாளையிட்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவராக இருந்த போதிலும், தன் கட்சி சார்ந்த அரசியலுக்கு அப்பால் முழு இலங்கை மக்களுக்காகவும் உழைத்த பெருந்தகையே மறைந்த ஆறுமுகன் தொண்டமான். இன, மத பேதம் பாராமல் அனைவரோடும் சகஜமாகப் பழகக்கூடிய நல்ல நண்பர் ஒருவரை என் கண் முன்னே இழந்த தவிப்பை இன்னமும் என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

அவர் கண்ட கனவுகள் நிச்சயம் ஒருநாள் நிறைவேறும். தன் மக்களின் நிரந்தர தீர்வுக்காய் குரல் கொடுத்த அன்னாரின் ஆத்மா நிச்சயமாகப் பூரிப்படையும் காலம் வெகு தூரத்திலில்லை. அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தார், கட்சிசார் உறுப்பினர்கள் அனைவருக்கும் என் ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகட்டும்" என்றார்.

# நீதிமன்றத்துக்கு அருகில் துப்பாக்கிப் பிரயோகம்

பலப்பிட்டிய நீதிமன்றத்துக்கு அருகில் நேற்று வெள்ளிக்கிழமை (26) காலை துப்பாக்கிப் பிரயோகச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் அம்பலாங்கொடை கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர் ஒருவர் காயமடைந்துள்ளதாக, பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# அபுதாபியில் திடீர் தீ விபத்து

## இலங்கை பெண் உட்பட 06 பேர் உயிரிழப்பு

அபுதாபியிலுள்ள பானி யாஸ் பகுதியிலுள்ள ஹோட்டலொன்றில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் இலங்கைப் பெண்ணொருவர் உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளதாக, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த இலங்கைப் பெண் கடந்த 2021ஆம் ஆண்டு சுற்றுலா வீஸாவில் ஐக்கிய அரபு அமீரகத்துக்குச் சென்றதாகவும், அவர் தெரிவித்தார்.

இதில் காயமடைந்தவர்களில் இருவர் ஆபத்தான நிலையில் உள்ளனர். தீ விபத்துக்கான காரணத்தை கண்டறிய விசாரணை நடைபெற்று வருவதாக, அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சொத்து விபரங்களை வெளியிடுவதில்

# தற்போதைய, முன்னாள் ஜனாதிபதிகள் முன்னுதாரணமாக செயற்பட வேண்டும்

## சட்டமூலத்தை சமர்ப்பித்து எரான் விக்கிரமரட்ண எம்.பி. சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தற்போதைய ஜனாதிபதி மற்றும் முன்னாள் ஜனாதிபதிகள் தமது சொத்து விபரங்களை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்து முன்னுதாரணமாகச் செயற்பட வேண்டுமென, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரட்ண தெரிவித்தார்.

அது தொடர்பான சட்டமூலமொன்றை நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து கருத்து தெரிவித்த போதே, அவர் இதனை தெரிவித்தார். தற்போதைய ஜனாதிபதி மற்றும் முன்னாள் ஜனாதிபதிகள் இந்த விடயத்தில் முன்னுதாரணமாகச் செயற்பட்டால், ஏனைய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் அதனை சிறப்பாக பின்பற்றுவரென்றும், அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

பாராளுமன்றத்தில் இது தொடர்பாக மேலும் தெரிவித்த அவர்,

"சொத்துகள், வளங்கள் வெளிப்படுத்துதல் தொடர்பான திருத்த சட்டமூலத்தை நான் சபையில் சமர்ப்பிக்கின்றேன். சட்ட உருவாக்கத்தின் மூலம் மட்டுமன்றி, முன்னுதாரணமான செயற்பாடுகளின் மூலமே நாட்டில் மாற்றம் ஏற்பட முடியும்.

அந்த வகையில், தற்போதைய ஜனாதிபதி, பாராளுமன்றத்திலுள்ள முன்னாள் ஜனாதிபதிகள் இருவர் 06

# TNA தலைவர் இரா.சம்பந்தனுடன் எதிர்க்கட்சி தலைவர் சஜித் சந்திப்பு



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்குமிடையிலான சந்திப்பொன்று சம்பந்தனின் இல்லத்தில் நேற்று முன்தினம் (25) மாலை நடைபெற்றது. நாட்டில் நிலவும் அரசியல் நிலைமைகள் தொடர்பாக இங்கு விரிவாக ஆராயப்பட்டதுடன், பொருளாதார ரீதியாக ஏற்பட்டுள்ள வீழ்ச்சி தொடர்பாகவும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

# பொலிஸ் அதிகாரி மீது தாக்குதல்

## பெண் உட்பட மூவர் கைது

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைத் தாக்கி அவரது கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் பெண் உட்பட மூவரை களனி பிரிவு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

பேலியகொடை ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே பாலத்துக்கு அருகில் போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், தலைக்கவசம் அணியாமல் சென்ற மோட்டார் சைக்கிள் ஓட்டுநரை நிறுத்தி சோதனையிடச் சென்ற போது, மற்றுமொரு பெண் அந்த இடத்துக்கு வந்து பொலிஸ் உத்தியோகத்தருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு அவரை தாக்கியுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன், சந்தேக நபர்கள் புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இதன்போது கைது செய்யப்பட்டவர்கள் 20, 22 மற்றும் 51 வயதுடைய களனி, பட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக களனி பிரிவு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

# 'மரணத்தில் பூத்த மலையகம்' நிகழ்வு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இன்று




மலையக மக்களின் வரலாற்றை பறை சாற்றும் வகையில் 'மரணத்தில் பூத்த மலையகம்' எனும் மலையக மக்களின் 200 வருடங்களை குறிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது.

கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் தலைவர் என். இன்பம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பின் 06

# இலங்கையிடமிருந்து எந்தவொரு இழப்பீட்டையும் கோரவில்லை

## இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவிப்பு




2020 செப்டெம்பர் மற்றும் 2021 மே, ஜூன் மாத காலப்பகுதிகளில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலிலும் நியூ டயமன்ட் கப்பலிலும் ஏற்பட்டிருந்த தீ விபத்துகளின் போது வழங்கிய உதவிகளுக்காக இலங்கை அரசாங்கத்திடமிருந்து இழப்பீட்டை இந்திய அரசாங்கம் கோரவில்லையென, இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்திய அரசாங்கம் உதவிகளுக்காக இலங்கை அரசாங்கத்திடமிருந்து நட்டஈட்டையோ அல்லது இழப்பீட்டையோ கோரியுள்ளதாக ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் மறுப்புத் தெரிவித்துள்ளதுடன், இவ்வாறான அறிக்கைகள் முற்றிலும் தவறானதும் பொய்யானதுமாகுமென்றும் தெரிவித்துள்ளது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலிலும் நியூ டயமன்ட் கப்பலிலும் ஏற்பட்டிருந்த தீ விபத்துகளின் போது, அதனைக் கட்டுப்படுத்துவதற்காக துரித உதவியை வழங்குமாறு இலங்கை கடற்படையால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக இந்திய கரையோரக் காவல் படையினரின் கப்பல்கள் இந்திய அரசாங்கத்தால் உடனடியாக கடமையில் ஈடுபடுத்தப்பட்டன.

இந்த இரு தீ அனர்த்தங்களின் போதும் ஏற்பட்டிருந்த அபாயகரமான பாதிப்புகளை முறியடிப்பதிலும் இலங்கையின் சமுத்திர சுற்றுச்சூழலிலும் கடலிலும் ஏற்பட்ட பாதிப்புகளை கட்டுப்படுத்துவதிலும் இக்கப்பல்களால் முன்னெடுக்கப்பட்டிருந்த மீட்பு பணிகள் மிகவும் முக்கியமான வகிபாகத்தைக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக்கப்பல்களை சேவையில் அமர்த்தியமை, மீட்பு பணிகள் மற்றும் இக்கப்பல்களால் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் ஆகியவற்றுக்கான இழப்பீட்டுக்கான விண்ணப்பம் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக 'மாசுபடுத்துபவர் பணம் செலுத்தும் நெறிமுறையின்' கீழ் எம்மால் முன்வைக்கப்பட்டது. அத்துடன், குறிப்பிட்ட மன்றத்தில் இலங்கை சார்பாக இந்தக் கோரிக்கையுடன் இணைந்துகொள்ளுமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடப்பட்டது. 06

# அலி சப்ரி ரஹீம் எம்.பி.க்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கவும்

## ஆளும், எதிர்க்கட்சியினர் வலியுறுத்து

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தங்கம் மற்றும் கையடக்கத்தொலைபேசிகள் ஆகியவற்றை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வந்த குற்றச்சாட்டுக்காக தடுத்து வைக்கப்பட்டு, அபராதம் விதிக்கப்பட்டு விடுதலையான அலி சப்ரி ரஹீம் எம்.பி. மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென, ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாராளுமன்ற 06

# காட்டு யானை தாக்கி சிறுவன் உயிரிழப்பு

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

தலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திறப்பனை குளத்துக்கு அருகில் நேற்று முன்தினம் (25) காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி 15 வயதுச் சிறுவனொருவன் உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

திறப்பனை பிரதேசத்தைச் சேர்ந்த சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சிறுவன் இன்னும் சில சிறுவர்களுடன் திறப்பனை 06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 193.22 | 204.57 |
| கனடியன் டொலர் | 217.21 | 229.84 |
| யூரோ | 318.48 | 335.40 |
| ஜப்பான் யென் | 2.1257 | 2.2352 |
| சிங்கப்பூர் டொலர் | 218.95 | 231.23 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 366.55 | 384.93 |
| சுவிஸ் பிராங்க் | 326.12 | 345.79 |
| அமெரிக்க டொலர் | 297.60 | 310.95 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 804.37 | கட்டார் ரியால் | 83.23 |
| குவைத் டினார் | 986.01 | சவூதி ரியால் | 80.86 |
| ஓமான் ரியால் | 787.66 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 82.58 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சோபகிருது வருடம் வைகாசி மாதம் 13ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 துல்கஃதா பிறை 06

### குறள் தரும் சிந்தனை

இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்

உற்றாராக இல்லாமல் உற்றார்போல நடிப்பவர்களின் நட்பு, மகளிருக்குரிய நற்பண்பு இல்லாமல் அப்பண்பு உள்ளவர் போல நடிக்கும் விலை மகளிரின் மனம்போல உள்ளொன்றும் புறமொன்றுமாக இருக்கும்.

# நெருக்கடிகள் நீங்க வேண்டும் என்பதே மக்களின் விருப்பம்

நாட்டில் இப்போதெல்லாம் தேர்தல் பற்றியோ அல்லது அரசியல் தொடர்பாகவோ அலட்டிக் கொள்கின்ற மக்கள் மிகவும் குறைவென்றே கூற வேண்டியுள்ளது. அரசியல்வாதிகள் மாத்திரமே அவை பற்றி பேசிக் கொள்கின்றார்கள். அவர்களிலும் எதிரணியைச் சேர்ந்த அரசியல்வாதிகளே தேர்தல் அவசியமென்றும், ஆட்சியை மாற்ற வேண்டுமென்றும் கூறுகின்றார்கள். ஆனால் மக்களோ அதுபற்றிப் பேசுவதில்லை.

மக்கள் மத்தியில் அரசியல் மீதான ஆர்வம் மிகவும் குன்றிப் போயுள்ளதற்கான காரணத்தைத் தேடுவது கடினமான காரியமல்ல. மக்கள் மத்தியில் தேர்தல் மீதான ஆர்வம் உண்மையிலேயே இப்போது கிடையாது. வாழ்க்கைச் சுமையும் பொருளாதார நெருக்கடியும் மிக வேகமாகக் குறைந்து கொண்டு வருவதனால், தேர்தல் பற்றிப் பேசுவதற்கான அவசியம் தற்போது கிடையாதென்பதே மக்கள் மத்தியிலுள்ள அபிப்பிராயமாக இருக்கின்றது.

நாட்டில் கடந்த ஆண்டில் பொருளாதார நெருக்கடி நிலவிய காலப்பகுதியை மக்களெல்லாம் இலகுவில் மறந்துவிட முடியாது. அவ்வாறான பொருளாதார நெருக்கடியொன்றை எமது நாடு முன்னெப்போதுமே சந்தித்திருக்கவில்லை. எமது மக்களுக்கு அது புதியதொரு அனுபவமாகவே இருந்தது. மக்கள் அனுபவித்த இன்னல்கள் கொஞ்சநஞ்சமல்ல.

சமையலுக்கான எரிவாயுவையும் மண்ணெண்ணெயையும் பெற்றுக் கொள்வதற்காக இரவுபகலாக நாட்கணக்கில் மக்கள் தெருக்களில் நீண்ட கியூவரிசையில் காத்துக் கிடக்க வேண்டியிருந்தது. அவ்வாறு இரவுபகலாக கியூவரிசையில் காத்துக் கிடந்த மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்ல வேண்டியுமிருந்தது. எரிவாயு அல்லது மண்ணெண்ணெய் கிடைக்காத காரணத்தினால் வீடுகளில் சமையல் செய்ய முடியாத நாட்களும் இருந்தன.

அதேபோன்றுதான் பெற்றோலுக்கும் டீசலுக்கும் மக்கள் திண்டாட வேண்டியிருந்தது. வாகன உரிமையாளர்கள் தங்களது வாகனத்துக்கான நான்கு லீற்றர் பெற்றோலைப் பெற்றுக் கொள்வதற்காக காலை முதல் மறுநாள் காலை வரை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காத்துக் கிடந்தனர். அவ்வாறு காத்துக் கிடந்தும் கூட இறுதிநேரத்தில் பெற்றோல் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்பியவர்கள் அநேகம்.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக தூர இடங்களுக்கான வாகனப் போக்குவரத்துகளும் முடங்கிக் கிடந்த நாட்கள் ஏராளம். அவசர நோயாளர்களை உரிய நேரத்துக்கு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முடியாத காரணத்தினால் நோயாளர்கள் ஒரு சிலர் பரிதாபமாக உயிரிழக்க வேண்டிய சந்தர்ப்பங்களும் நிகழ்ந்துள்ளன.

இவ்வாறான பரிதாபங்களெல்லாம் தற்போது கிடையாது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட கியூவரிசையெல்லாம் இப்போது இல்லை. தற்போது எரிபொருளுக்காக வழங்கப்பட்டுள்ள கோட்டா தங்களுக்கு ஓரளவுக்குப் போதுமானதென்று வாகன உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். கியூஆர் கோட்டாவுக்குக் கிடைக்கின்ற பெற்றோல் மூலம் தங்களால் சமாளிக்க முடிவதாக மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் கூறுகின்றனர். எனவே வாகன உரிமையாளர்கள் தற்போது நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர்.

சமையல் எரிவாயு விடயமும் அவ்வாறானதுதான். சமையல் எரிவாயு தற்போது எங்கும் தாராளமாகவே கிடைக்கின்றது. அதன் விலையும் குறிப்பிடத்தக்களவு குறைந்திருக்கின்றது. எரிவாயுவுக்கான கியூவரிசையென்பதை நாட்டில் காண முடியாதிருக்கின்றது.

பால்மாவின் விலை அதிகரித்துள்ளதென்பது உண்மைதான். ஆனால் பால்மாவுக்கு தற்போது எங்குமே தட்டுப்பாடு கிடையாது. கடைகளில் பால்மா தாராளமாகவே கிடைக்கின்றது. அதேவேளை பால்மாவின் விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அவ்வாறு பால்மாவின் விலை குறைவடையுமானால் மக்களுக்கு ஓரளவு நிம்மதியாகவிருக்குமென்பது உண்மை.

ஒட்டுமொத்தத்தில் பார்க்கையில், மக்கள் பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த ஒன்றரை வருட காலமாக அனுபவித்து வந்துள்ள துன்பங்கள் படிப்படியாகக் குறைவடைந்து கொண்டு வருகின்றன என்பதே யதார்த்தமாகும். நாட்டின் பொருளாதார நெருக்கடியானது மேலும் குறைவடைந்து கொண்டு செல்லுமானால் மக்கள் விரைவில் நிம்மதியடைவரென்று எதிர்பார்க்க முடியும்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி இத்தனை தூரம் சீரடைந்து கொண்டு வருவதற்குக் காரணமானவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார். அவர் பாராளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னரே பொருளாதார நெருக்கடியானது வேகமாகக் குறைவடைந்து மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடத் தொடங்கினரென்பது தெரிந்த விடயமாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நீண்டகால அரசியல் அனுபவம், ஆற்றல் மற்றும் ஆளுமை காரணமாகவே நாட்டில் நெருக்கடி நிலைமை தணிவடைந்தது என்பதே உண்மை.

இவ்வாறான நிலைமையில் தேர்தல் பற்றியோ, எதிர்ப்பு அரசியல் தொடர்பாகவோ மக்கள் அக்கறை கொள்வதில்லை. நாட்டில் அத்தனை நெருக்கடிகளும் நீங்கி சகஜநிலைமை ஏற்பட வேண்டுமென்பது மட்டுமே மக்களின் விருப்பமாகும்.

editor.tkn@lakehouse.lk

# காரைதீவு கண்ணகை அம்மன் ஆலய திருக்குளிர்த்தி நாளைமறுதினம் ஆரம்பம்






வரலாற்றுச் சிறப்புமிக்க காரைதீவு கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்த்தி சடங்கு நிகழ்வுகள் நாளைமறுதினம்(29) திங்கட்கிழமை கடல்தீர்த்தம் எடுத்து வந்து கல்யாணக்கால் நடுதலுடன் ஆரம்பமாகின்றன.

தொடர்ந்து ஒருவாரகாலம் சடங்குகள் இடம்பெற்று ஜூன் 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை திருக்குளிர்த்தி பாடுதலுடன் சடங்கு நிறைவடையும்.

800 ஆண்டுகளுக்கு முன்பே காரேறு மூதூர் என விளங்கிய தற்போதைய காரைதீவு சிறுசிறு காடுகளைக் கொண்டு விளங்கியது. கதிர்காமம் யாத்திரைக்குச் செல்லும் யாத்திரிகர்கள் இவ்வூரில் தரித்து நின்று செல்வது வழக்கம்.

ஒருமுறை சேனாதிராஜனின் விதவை மகள் தேவந்தி அம்மையார் தனது ஒரே மகளான சின்ன நாச்சியாருடன் இலங்கை மன்னன் கஜபாகுவின் அழைப்பை ஏற்று இந்தியாவில் இருந்து கதிர்காமம் யாத்திரைக்கு செல்லும் வழியில் காரைதீவை வந்தடைந்தார்.

அத்தீவு மக்களின் உபசரிப்பிலும், ஆதரவிலும் கவரப்பட்ட அம்மையாரும், மகளும் இவ்வூரிலேயே சற்று தங்குவது என முடிவு செய்து, குடிசையமைத்துக் கொண்டனர். வரும்போது தங்களோடு கொண்டுவந்த கண்ணகி அம்மன் விக்கிரகத்தை அங்கே இருந்த வேம்புமரத்தினருகே சிறுகோயில் அமைத்து வழிபாடு செய்து வந்தனர்.

ஒருநாள் இப்பகுதியை ஆட்சி செய்த வன்னிமை அரசன் தனது குடிமக்களையும் விளைநிலங்களையும் பார்வையிட்டுக் கொண்டு தனது மாளிகைக்குச் சென்றான். வழியில் அவன் வந்த யானை நடக்க முடியாமல் கீழே விழுந்தது. செய்வதறியாது தவித்து அரசன், அந்நேரம் கோயில் மணியோசை கேட்பதை உணர்ந்து அங்கே சென்றான். அரசன், நடந்ததைக் கூறினான். தேவந்தி அம்மையார் அம்மன் வழிபாட்டில் இருந்த வேப்பிலையை அரைத்து, கோயில் தீர்த்தத்தில், கலந்து யானைக்கு கொடுத்து கண்ணகியின் சக்தியால் யானையை எழுப்பினார். இதனால் மகிழ்வுற்ற மன்னன், காணிக்கையாக கோயில் கட்டித் தருகின்றேன். அத்தோடு நீங்களும் இவ்விடத்தை விட்டு செல்லக்கூடாது என வேண்டினான்.

## எட்டு நூற்றாண்டுகால வரலாற்றுப் புகழ்மிகுந்த திருத்தலம்

கோயில் கட்டி முடிந்ததும் அம்மனுக்கு பொங்கல் பெருவிழா எடுப்பதற்கு தனது இருதுணைவிமாருடன் அட்டப்பள்ளம் சிங்காரத்தோப்பு எனும் ஊரிலிருந்து வந்து கலந்து கொண்டான். அப்போது அம்மனுடைய திரை விலக்கப்படாது பூசைசெய்வதை விரும்பாத அரசனின் இரண்டாவது மனைவி சிறியபூங்கோதை கவலையை மன்னனிடம் முறையிட்டார். பின் திரைவிலக்கி பூசை நடைபெற சிலையை உற்றுப்பார்த்த அவருக்கு கண்ணொளி மங்கியது.

அதிர்ச்சியடைந்த அவரை ஆறுதல்படுத்தி தேவந்தி அம்மையார், கண்ணகியிடம் பிரார்த்தனைச் செய்து சிகிச்சையளித்ததும் இழந்த கண்ணொளி திரும்பப் பெற்றார் அரசி. இதனால் மகிழ்ச்சியடைந்த மன்னன் காணிக்கையாக தனது 101 ஏக்கர் காணிகளை இக்கோயிலுக்கு மானியமாக எழுதிக் கொடுத்தான். இக்காணிகளே 'கண்கண் வெளி' என அழைக்கப்படுகின்றன.

தேவந்தி அம்மையாரின் மகள் சின்ன நாச்சியாருக்கு இவ்வூரில் உயர்குலத்தில் மணம் முடித்துக் கொடுத்து அவர்களுக்குப் பிறந்த பெண் மகள்களான மாணிக்க நாச்சியார், கதிர நாச்சியார் வள்ளி நாச்சியார் ஆகிய மூவரினதும் பெண் சந்ததியினருக்கே இவ்வாலயமும், அதன் சொத்துக்களும் உரிமையாகக்கப்பட்டன.

இவ்வாறு கஜபாகு மன்னனால் வரவழைக்கப்பட்ட தேவந்தி அம்மையாரும் அவர் மகள் சின்னநாச்சியாராலும் காரைதீவில் கண்ணகி அம்மன் ஆலயம் அமைய அடித்தளம் இடப்பட்டது. பின்னர் சின்னநாச்சியாரின் மூன்று பெண்களாலும் அவர்கள் பெண் வழிச்சந்ததியாராலும் இவ்வாலய சடங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அங்கிருந்த ஆலய விருட்சம் வேம்பு இன்றும் அடியவர்களின் வேண்டுதலை நிறைவேற்றும் விருட்சமாக திகழ்வது அம்மனின் கடாட்சமே.

விபுலமாமணி
வி.ரி.சகாதேவராஜா...
காரைதீவு

# நிலவுக்கு மனிதனை அனுப்புவதில் சளைக்காத முயற்சியில் இந்தியா!



## சந்திராயன்–3 விண்கலம் ஜூலை மாதம் 12ஆம் திகதி விண்ணை நோக்கி பாய்கிறது!



இந்திய விஞ்ஞானிகள் விண்வெளி துறையிலும் சாதனை படைத்து வருகிறார்கள். அந்த வகையில் சந்திரனுக்கு மனிதனை அனுப்பும் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். அதற்கு முன்னோட்டமாக சந்திரனுக்கு இந்தியா விண்கலங்களை அனுப்பி பரிசோதனை செய்து வருகிறது.

அந்த வகையில் கடந்த 2008ம் ஆண்டு சந்திராயன்1 விண்கலம் நிலவுக்கு சென்றது. இதில் வெற்றி கிடைத்ததை தொடர்ந்து அடுத்த கட்ட முயற்சிகளை விஞ்ஞானிகள் மேற்கொண்டனர். இதன்பயனாக கடந்த 2019ம் ஆண்டு சந்திராயன் 2 விண்கலம் நிலவை நோக்கி பயணமானது. இந்த விண்கலம் நிலவை தொட்டபோது குறிப்பிட்ட இலக்கை அடையும் முன்பு அதன் மேற்பகுதியில் தரை இறங்கியது. இதனால் இந்தச் சோதனையில் எதிர்பார்த்த தகவல்கள் கிடைக்கவில்லை.

என்றாலும் நிலவுக்கு மனிதனை அனுப்பும் முயற்சியின் அடுத்த கட்ட சோதனைகளை இந்திய விஞ்ஞானிகள் தொடர்ந்து மேற்கொண்டனர். இதையடுத்து சந்திராயன்3 விண்கலம் உருவானது. இது முந்தைய விண்கலத்தை போல் அல்லாமல் புதிய தொழில்நுட்பங்களுடன் உருவாக்கப்பட்டது. மேலும் இந்த விண்கலம் நிலவுக்கு வெகுஅருகில் தரைஇறங்கும் வகையிலும் நிர்மாணிக்கப்பட்டது. அதாவது நிலவுக்கு 100 கிலோ மீட்டர் அருகில் தரை இறங்கும்படி விண்கலம் வடிவமைக்கப்பட்டது. அதோடு மெதுவாக தரை இறங்கும்படியும் உருவாக்கப்பட்டது.

நிலவில் தரை இறங்கிய பின்பு அங்கு பல்வேறு சோதனைகளை நடத்துவதற்கான கருவிகள் இந்த விண்கலத்தில் பொருத்தப்பட்டு வருகின்றன. இந்தக் கருவிகள் மூலம் நிலவில் உள்ள தனிமங்கள் குறித்தும், அணு இருப்பு குறித்தும் சோதனை நடத்தப்படும். மேலும் வெப்பம் கடத்தும் திறன், நிலவில் தரை இறங்கும் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்பு உள்ளதா? என்பதை கண்டறியும் சோதனையையும் இந்த விண்கலம் மேற்கொள்ளும். இதன்மூலம் நிலவுக்கு மனிதனை அனுப்பும்போது என்னென்ன பாதுகாப்பு அம்சங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதை துல்லியமாக தெரிந்து கொள்ள முடியும் என விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் சந்திராயன்3 விண்கலத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. சந்திராயன்3 விண்கலம் ரூ.615 கோடி செலவில் உருவாகி வருகிறது. தற்போது இந்த விண்கலத்தின் இறுதி கட்ட பணிகள் நடந்து வருகிறது. இப்பணிகள் முழுமையாக முடிவடைந்ததும் விண்ணில் ஏவப்படும். இதற்கான ஏற்பாடுகள் ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள சதீஷ் சவான் விண்வெளி மையத்தின் 2வது ஏவுதளத்தில் நடந்து வருகிறது. இறுதி கட்ட பணிகள் முடிவடைந்ததும் வருகிற ஜூலை மாதம் 12ஆம் திகதி இந்த விண்கலத்தை விண்ணில் ஏவ முடிவு செய்யப்பட்டு உள்ளது.

# பாலமுனை அல்ஹிதாயா வித்தியாலய மாணவர்கள் ஒலிம்பியாட் போட்டியில் மாகாண மட்டத்திற்கு தெரிவு

அக்கரைப்பற்று வலய பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற கணித ஒலிம்பியாட் போட்டியில் பாலமுனை அல் ஹிதாயா வித்தியாலய மாணவர்கள் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று வலய பாடசாலைகளுக்கிடையிலான கணித ஒலிம்பியாட் போட்டி அண்மையில் இடம்பெற்றது. குறித்த போட்டி நிகழ்ச்சியில் பாலமுனை அல் ஹிதாயா வித்தியாயம் சார்பாக கலந்து கொண்ட என்.எச்.தானியா, ஜே.பாதிமா ஜெளசன் ஹிஜா, எம்.ஜே.தீசான் பானு ஆகியோர் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டனர்.





மேற்படி போட்டி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வெற்றிபெற்று தமது பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் அல் ஹிதாயா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் பி.முஹாஜிரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அதிபர், பிரதி அதிபர் மற்றும் ஆசிரியர்களினால் குறித்த மாணவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலைக்கும் பாலமுனை பிரதேசத்துக்கும் பெருமை சேர்த்த மாணவர்களுக்கும் அவர்களை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களுக்கும் பாடசாலை சமூகத்தினர் வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆதம் லெப்பை றியாஸ்...
(பாலமுனை விசேட நிருபர்)

# தலிபான்களின் தடையையும் மீறி சாதனை படைத்த ஆப்கான் பெண்!

ஆப்கானிஸ்தானில் பெண்களின் கல்விக்கு தலிபான்கள் தடை விதித்திருந்த போதிலும் ஒன்லைன் மூலம் சென்னை ஐஐடியில் எம்.டெக் படித்து முடித்துள்ளார் பெஹிஸ்டா என்ற பெண்.

ஆப்கானிஸ்தானில் கடந்த 2021ம் ஆண்டு அந்நாடு முழுவதையும் தலிபான்கள் கைப்பற்றினர். அப்போது முதல் பெண்களுக்கான அனைத்து சுதந்திரங்களும் பறிக்கப்பட்டுள்ளன. கல்வி, வெளியில் செல்வது, வேலை போன்ற எதிலும் பெண்கள் ஈடுபடக்கூடாது என்று பெண்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. ஆனால் அத்தனை தடைகளையும் மீறி ஆப்கானிஸ்தானை சேர்ந்த ஒரு பெண் ஐஐடி மெட்ராஸில் தன் எம்.டெக் படிப்பை முடித்துள்ளார்.

தெற்கு ஆப்கானிஸ்தானை சேர்ந்தவர் 26 வயதான பெஹிஸ்டா. இவர் 2021ம் ஆண்டுக்கு முன்பு, தன் எம்.டெக் கெமிக்கல் என்ஜினீயரிங் படிப்பை மெட்ராஸ் ஐஐடியில் தொடர விரும்பி அந்தக் கல்லூரியில் சேர விண்ணப்பித்துள்ளார். அங்கு நுழைவுத் தேர்வில் தேர்ச்சியடைந்த அந்த மாணவிக்கு கல்லூரியில் சேர ஆசனம் கிடைத்துள்ளதாக மின்னஞ்சல் வந்துள்ளது. அந்த நேரத்தில் தலிபான்களால் வீட்டிலேயே சிறைவைக்கப்பட்ட பெஹிஸ்டா, தன் நிலையை விபரித்து ஐஐடி நிர்வாகத்துக்கு பதில் மின்னஞ்சல் அனுப்பியுள்ளார்.

அவரின் நிலை அறிந்து ஐஐடி மெட்ராஸ் நிறுவனம் மற்றும் பேராசிரியர் ரகு ஆகியோர் அந்தப் பெண்ணுக்கு உதவி செய்ய முன் வந்துள்ளனர். இந்த வாய்ப்பை கச்சிதமாகப் பயன்படுத்திக் கொண்ட பெஹிஸ்டா, யாருக்கும் தெரியாமல் தன் வீட்டில் WIFI இணைப்பு எடுத்து இணையம் மூலமாகவே தன் இரண்டு வருடப் படிப்பை முடித்துள்ளார். அதேபோல் அனைத்து செமஸ்டர்களையும் ஒன்லைனில் எழுதியுள்ளார். தற்போது ஐஐடி மெட்ராஸில் படித்து தேர்ச்சி பெற்ற மாணவர்களில் பெஹிஸ்டாவும் ஒருவராக சாதனை படைத்துள்ளார்.



"பேராசிரியர் ரகு எனக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்தார். இரண்டு வருடங்கள் ஒன்லைன் மூலம் எனது படிப்பு தொடர்ந்தது. முதல் இரண்டு செமஸ்டர்கள் மிகவும் சிரமப்பட்டேன். பின்னர் கடுமையாகப் படித்து மீதமுள்ள செம்ஸ்டர்களை எளிதாக முடித்தேன். நான் ஆப்கானிஸ்தானில் முடித்த பி.டெக் படிப்புடன் மெட்ராஸ் ஐஐடி படிப்பை ஒப்பிடுகையில் இங்கு நிறைய விஷயங்கள் கற்றுக்கொண்டேன் என்றுதான் சொல்ல வேண்டும். ஆப்கானிஸ்தானிலும் இது போன்ற ஒரு கல்வி முறையின் அவசியத்தை உணர்கிறேன்" என்கிறார் அப்பெண்.

# இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மூன்று நாடுகளுக்கு மேற்கொண்ட வரலாற்றுப் பெருமை மிகுந்த விஜயம்!



உலகை உலுக்கி வந்த கொரோனா தொற்று பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டு விட்ட நிலையில் கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய 7 நாடுகளின் அமைப்பான ஜி7 அமைப்பின் உச்சிமாநாடு ஜப்பானில் கடந்த 19 ஆம் திகதி ஆரம்பமாகி 21 ஆம் திகதி வரை மூன்று நாட்கள் ஜப்பானில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் பார்வையாளராக (சிறப்பு அழைப்பாளர்) பங்கேற்கச் சென்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உலகத் தலைவர்களை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஜப்பான் தலைமையேற்றுள்ள இந்த மாநாடு ஹிரோஷிமாவில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மேக்ரான், ஜெர்மனி பிரதமர் ஒலாப் ஸ்கோல்ஸ், இத்தாலி பிரதமர் ஜியார்ஜியா மெலோனி, ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா, இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உள்ளிட்ட உலக நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

இந்த மாநாட்டிற்கு ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடாவின் அழைப்பின் பேரில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார். மேலும், தென்கொரியா, அவுஸ்திரேலியா, பிரேசில், வியட்நாம், இந்தோனேசியா, கொமோரோஸ், குக் தீவு, உக்ரேன் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களும் பங்கேற்றுள்ளனர்.

ரஷ்யா உக்ரேன் போர் நடைபெற்று இரண்டு தரப்பிலும் சேதங்கள் நிகழ்ந்த நிலையில் இந்த மாநாட்டின் தொடக்கத்தில் உக்ரைன் நாட்டின் தற்போதைய நிலைவரம் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. இந்த மாநாட்டில் உணவு, உரம், எரிசக்தி பாதுகாப்பு உட்பட உலகம் எதிர்கொண்டுள்ள பல்வேறு சவால்கள் குறித்து இந்தியப் பிரதமர் மோடி உரையாற்றினார்.

பிரதமர் நரேந்திர மோடியுடன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலும் ஜப்பானில் நடைபெற்ற ஜி7 உச்சிமாநாட்டில் கலந்து கொண்டுள்ளார்.

இது குறித்து பிரதமர் மோடி கருத்துத் தெரிவிக்கையில் 'ஜி20 அமைப்பின் தலைமைப் பதவியை இந்தியா வகித்து வரும் வேளையில், ஜி7 உச்சிமாநாட்டில் கலந்து கொள்வது முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. ஜப்பான் பிரதமர் கிஷிடாவுடனான சந்திப்பின் மூலம் இந்தியாஜப்பான் உறவு வலுப்பெறும் எனத் தெரிவித்துள்ளார்.

ஜி7 மாநாட்டில் பங்கேற்க ஜப்பான் சென்ற பிரதமர் நரேந்திர மோடிக்கு அங்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்ட நிலையில், அங்கு வாழும் இந்திய வம்சாவளியினருடனும் அவர் கலந்துரையாடினார். ஹிரோஷிமா நகரை அடைந்த அவருக்கு பெருவரவேற்பு அளிக்கப்பட்டது.

ஜப்பான் வாழ் இந்தியர்களின் குழந்தைகளுடன் பிரதமர் மோடி கலந்துரையாடினார். பின்னர் அங்கு குழுமியிருந்த மக்கள் தங்கள் செல்போனில் பிரதமருடன் செல்பி புகைப்படங்கள் எடுத்துக் கொண்டனர். பின்னர், ஹிரோஷிமாவில் காந்தி சிலை ஒன்றை நரேந்திர மோடி திறந்து வைத்தார்.

பிரதமர் நரேந்திர மோடி ஜப்பான் விஜயத்தின் பின்னர் பப்புவா நியூ கினியா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கும் வரலாற்று சிறப்புமிக்க சுற்றுப்பயணம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஜி7 மாநாட்டைத் தவிர 40 இற்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளில் மோடி கலந்து கொண்டார். 24 இற்கும் மேற்பட்ட உலகத் தலைவர்களுடன் பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்தினார்.



ஜி7 உச்சி மாநாட்டில் பங்கேற்ற பின்னர் பிரதமர் நரேந்திர மோடி தனது பயணத்தின் அடுத்த கட்டமாக இந்திய பசிபிக் தீவுகள் ஒத்துழைப்பு உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பப்புவா நியூ கினியா சென்றார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அந்நாட்டின் பிரதமர் ஜேம்ஸ் மார்பேவை பிரதமர் மோடி நேரில் சந்தித்து பேசினார். அப்போது இருதரப்பு உறவுகள் குறித்து முக்கிய ஆலோசனை நடத்தினார். உலகப் பொதுமறையாம் திருக்குறளின் புத்தகத்தின் டோக்பிசின் மொழிபெயர்ப்பை பிரதமர் நரேந்திர மோடி அங்கு வெளியிட்டார்.

பின்னர், பப்புவா நியூ கினியா ஆளுநர் ஜெனரல் பாப் டாடேவை போர்ட் மெரெஸ்பியில் உள்ள ஆளுநர் மாளிகையில் சந்தித்துப் பேசினார். அப்போது, இரு நாடுகள் இடையிலான நல்லுறவு, வளர்ச்சி கூட்டாண்மை உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

இதனைத் தொடர்ந்து, இந்திய பசிபிக் தீவுகளின் 14 ஆவது ஒத்துழைப்பு உச்சிமாநாட்டில் கலந்து கொண்டு பேசிய பிரதமர் மோடி, பப்புவா நியூ கினியா தீவு அல்ல மிகப்பெரிய கடல் நாடு என பெருமிதம் தெரிவித்தார். பப்புவா நியூ கினியாவுடன் நட்பு பாராட்டுவதில் இந்தியா பெருமிதம் கொள்வதாக குறிப்பிட்டார்.

நரேந்திர மோடி தனது அடுத்தகட்டப் பயணமாக அவுஸ்திரேலியா சென்றார். அவருக்கு பலரும் உற்சாக வரவேற்பு அளித்தனர். பிரதமர் மோடிக்கு அவுஸ்திரேலிய பிரதமர் அண்டனி ஆல்பனீஸ் உற்சாக வரவேற்பளித்தார். மேலும், சிட்னியில் உள்ள அட்மிரால்டி இல்லத்தில் வைத்து மோடிக்கு சம்பிரதாய மரியாதை அளிக்கப்பட்டது.

இதனைதொடர்ந்து அட்மிரால்டி மாளிகையில் வைத்து பார்வையாளர்கள் புத்தகத்தில் பிரதமர் நரேந்திர மோடி கையெழுத்திட்டார். இருநாட்டு பிரதமர்களும் இரு தரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

அதன் பின்னர், புரிந்துணர்வு ஒப்பந்தங்களை இருவரும் பார்வையிட்டனர். இதில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதனையடுத்து உரையாற்றிய பிரதமர் மோடி, கடந்த ஓராண்டில் இது 6ஆவது சந்திப்பு என்றும், இது விரிவான உறவுகளின் ஆழத்தையும் நமது உறவுகளின் முதிர்ச்சியையும் பிரதிபலிக்கிறது எனவும் கூறியுள்ளார்.

மேலும், கோயில்கள் மீதான தாக்குதல் மற்றும் பிரிவினைவாத சக்திகளின் நடவடிக்கைகள் குறித்து பிரதமர் அந்தோனி அல்பானீசுடன் விவாதித்ததாகவும், அதற்கு கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளித்ததாகவும் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்,.

இந்தியப் பிரதமருக்கு கற்பூரம் ஏற்றியும், சாம்பிராணி காட்டியும் வரவேற்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அங்கு ஆயிரக்கணக்கான இந்தியர்கள் மத்தியில் உரையாற்றிய பிரதமர் மோடி, தீபாவளி, கிரிக்கெட், மாஸ்டர் ஷெஃப் உள்ளிட்டவைகளால் இரு நாடுகளும் ஒன்றிணைந்ததாகக் கூறினார்.

பல்லாயிரம் ஆண்டுகால துடிப்பான நாகரீகத்தைக் கொண்ட இந்தியா, ஜனநாயகத்தின் தாய் எனவும் உலகின் மிகப்பெரிய திறன்தொழிற்சாலையாக இந்தியா செயல்படுவதாகவும் அவர் பெருமிதம் தெரிவித்தார்.

பிரதமர் மோடியுடன் ஏராளமான இந்தியர்கள் உற்சாகத்துடன் செல்ஃபி எடுத்து மகிழ்ந்தனர். பரதநாட்டியம், கதகளி உள்ளிட்ட கண்கவர் இந்திய பாரம்பரிய நடன நிகழ்ச்சிகள் மூலம் மோடிக்கு வெகுஉற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

எஸ்.சாரங்கன்...

# மக்கள் அனுபவிக்கும் வேதனைகளைத் தீர்ப்பதற்காக ஆபத்துஉத்தாரக ஸ்தோத்திரத்தை அருளிய சுவாமிகள்


ஸ்ரீ தத்தா மகராஜ் கவிஷ்வர் மராத்தி மூலம் எழுதிய 'ஸ்ரீ வாசுதேவனானந்த சரஸ்வதி சுவாமிகளின் குருசரித்திரம்' என்ற புனிதநூலை, ஸ்ரீ வாசுதேவபாண்டே ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளர். சுவாமிகளின் அற்புதங்களும் உபதேசங்களும் நிறைந்த இந்த ஆன்மீக நூலை, சாய்நாதனின் பரமபக்தையான ரமா சுப்பிரமணியம் தமிழில் மொழிபெயர்த்து, கொழும்பு – 13, ஸ்ரீ வரதராஜ விநாயகர் சாயிநாதனின் சரணாலயம் பதிப்பித்துள்ளது. இதன் வெளியீட்டு விழா கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர்; சாயிநாதனின் சரணாலயத்தில் 18 ஜுன் மாலை 5 மணிக்கு நடைபெறும்.



ஸ்ரீ தத்தாத்ரேய அவதார புருஷர்களின் திவ்ய சரித்திரங்களை பாராயணம் செய்யும் வாய்ப்பு அடியேனுக்கு கிடைத்தது. அவ்வகையில், ஸ்ரீ தத்தரின் இரண்டாவது அவதாரமான ஸ்ரீ குரு நரசிம்ம சரஸ்வதியின் வழித்தோன்றலான, ஸ்ரீ வாசுதேவனானந்த சரஸ்வதி சுவாமிகளின் திவ்ய சரித்திரத்தை அறிய ஆர்வம் கொண்டேன். ஆனால் இதுவரை அவருடைய புனித சரித்திரம் தமிழாக்கம் செய்யப்படவில்லை என்பதை அறிந்து கொண்டேன். அவர் ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியாரின் வழிநின்று, முறையாக சன்யாச தர்மத்தை ஏற்றுக் கொண்டவர். பாரத தேசம் முழுவதும் பாதயாத்திரையாக சென்று, பக்திநெறியை பரவச் செய்தவர்.

ஸ்ரீ சுவாமிகள், தமது பக்தர்களின் வாழ்க்கையில் நாம் கற்பனை கூட செய்து பார்க்க இயலாத அற்புதங்களை இன்றளவும் நிகழ்த்திக் கொண்டு இருக்கிறார். தம்மை நாடி வரும் பக்தர்களின் வறுமை, வியாதிகள் மற்றும் செய்வினை, ஏவல் முதலிய மாந்திரீக கோளாறுகளையும் நீக்கி, தீவினைகள் நம்மை நெருங்காதவாறு காத்து இரட்சிக்கின்றார்.

ஸ்ரீ தத்தாத்ரேயரின் முதல் அவதாரமான, ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் அவதரித்த, பிதாபுரம் என்ற புண்ணிய தோத்திரத்தை முதன் முதலாக இந்த உலகிற்கு அறிவித்தவரே, ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள் ஆவார். இத்திவ்ய சரித்திரத்தை, எழுதிக் கொண்டிருக்கும் பொழுதே பல்வேறு அற்புதங்களை மகராஜ் அவர்கள் நிகழ்த்தினார்.




தினமும் புதிதாக சமைத்த உணவை, சகல உயிரினங்களுக்கும் சமர்ப்பிக்கும் இல்லத்தவரிடம் மட்டுமே அவர் யாசகம் பெறுவார் என்பதை அறிந்தேன்.

ஸ்ரீ தத்த அவதாரிகளான ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களுக்கும் ஸ்ரீ சமர்த்த சத்குரு ஸ்ரீரடி சாய் பாபாவும் ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகளை அன்புடன் தமது சகோதரர் என்று அனைவருக்கும் அறிவித்துள்ளனர். ஸ்ரீ தத்தாத்ரேயரே, ஆறு வயது குழந்தையின் உருவத்தில் பாலதத்தராக, ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகளின் மடியில் அமர்ந்து கொண்டிருந்ததை நரசோபாவாடியில் பக்தர்கள் கண்டு அதிசயத்தில் உள்ளனர்.

பூனாவில் அமைந்த ஸ்ரீ வாசுதேவரின் சமஸ்தானம், திவ்ய சரித்திரத்தை, ஸ்ரீ சுவாமிகளின் ஆராதனை விழா மகாசமாதி தினத்தின் போது 13 ஜுலை அன்று வெளியிடுவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சென்ற வருடம் (2022) ஸ்ரீ தேம்பே சுவாமிகள் அருளிய, ஆபத்து உத்தராக ஸ்தோத்திரம் இலங்கையில் கொட்டாஞ்சேனையில் அமைந்துள்ள சாயிநாதனின் சரணாலயத்தில், தொடர்ந்து தினமும் 21 முறை, இலங்கை வாழ் மக்களுக்காக உச்சாடனம் செய்யப்பட்டது. அதன் பலனை, ஸ்ரீ ஸ்வாமிகள், இந்த வருடம் அனைவருக்கும் அளித்துள்ளார் என்பதை நாங்கள் எல்லோரும் அறிந்து கொண்டோம். இந்நூலை தமிழ் உலகுக்கு சமர்ப்பிக்கின்றேன்.



ராமா சுப்பிரமணியன்...

# பிரித்தானியாவில் கல்வி கற்பதற்கான வாய்ப்பு எமது இளைஞர், யுவதிகளுக்கு சிறந்த வரப்பிரசாதம்

கல்வி மற்றும் வேலைவாய்ப்பின் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் செல்லுபவர்கள் தொகை அதிகரித்து வருகின்றது. அரச துறை உத்தியோகத்தர்கள், ஊழியர்களும் திணைக்கள விடுமுறை பெற்று வெளிநாடுகளுக்குச் செல்ல முடியும் என்ற அரசின் அறிவிப்பையடுத்து, அரச துறை ஊழியர்களும் வெளிநாடு பயணிக்கின்றனர். எதிர்காலத்தில் மேலும் அதிகமானவர்கள் வெளிநாடு செல்லுவதற்கான ஆர்வம், விருப்பத்தினை வெளிப்படுத்தி, பயண ஆயத்தங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில், இலங்கை இளைஞர், யுவதிகள் பிரித்தானியா நாட்டில் உயர்கல்வி கற்கும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் Merit Educational Services நிறுவனம் அட்டாளைச்சேனை 14, பிரதான வீதியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா நாட்டிலுள்ள முன்னணி பல்கலைக்கழகங்களில் இலங்கை இளைஞர், யுவதிகள் உயர் கல்வி பெற்றுக் கொள்வதற்கான வழிகாட்டல், ஆலோசனைகளை வழங்குதல், அவர்களுக்கான பணிகளை இலகுபடுத்திக் கொடுத்தல், பயண ஒழுங்குகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பன பிரஸ்தாப அலுவலகத்தின் பிரதான பணிகளாகும்.

கல்வி ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் இளைஞர், யுவதிகளுக்கு வழிகாட்டும் நம்பிக்கையான நிறுவனங்கள் கிழக்கு மாகாணத்தில் அதிகம் இல்லாதிருந்தமை கடந்த கால அனுபவமாகும். இவ்வாறான நிலையில் புதிய அலுவலகமொன்றின் வருகையானது, இளைஞர் யுவதிகளின் எதிர்காலம் குறித்த நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

நமது நாட்டு இளைஞர், யுவதிகள் வெளிநாடுகளிலுள்ள வசதி, வாய்ப்புக்களை அதிகம் அறியாதுள்ளனர். பின்தங்கிய பிரதேச மக்களுக்கு இதுதொடர்பில் விபரங்கள் போதுமானதாகவில்லை. பலர் வெளிநாட்டில் உயர் கல்வி பெறுவதற்கு ஆர்வமிருந்தும், அவர்களுக்கு சரியான வழிகாட்டுதல்கள் கிடையாது போனமை துரதிர்ஷ்டமாகும். இவ்வாறான நிலையில் மேற்படி புதிய அலுவலகத்தினதும், சேவைகளினதும் தேவை அவசியம் எனலாம்.

பிரித்தானியா நாட்டில் உயர்கல்வி கற்க விரும்புபவர்களுக்குத் தேவையான வழிகாட்டல், ஆலோசனைகளை வழங்குதல், சர்வதேசப் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களுடன் தொடர்பு மற்றும் இணைப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல், வேலை வாய்ப்பு மற்றும் வருமானமீட்டும் வழிமுறைகளை அறிமுகப்படுத்தல், ஏமாற்றம் இல்லாத நம்பிக்கையான பயண ஏற்பாடுகளுக்கான முன்னாயத்தங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற பணிகள், சேவைகளை புதிய அட்டாளைச்சேனை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.





நீண்டகால வரலாற்றைக் கொண்ட பிரித்தானியா, பல்சமய கலாசாரங்களை ஏற்றுக் கொள்ளும் நாடாக விளங்கி வருகின்றது. இவ்வாறான நாட்டில் நமது இளைஞர், யுவதிகள் கால்பதிக்கவும், தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளவும் வேண்டும். அதன்மூலம் நமது இலங்கை நாடு வளங்கொழிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இச்சேவையை இளந்தலைமுறையினரான இளைஞர், யுவதிகள் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே அதிகமானவர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

கிழக்கு மாகாண முதலமைச்சின் ஓய்வுநிலை செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.சாபிர், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா, அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம்.றாபி, தென்கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் ஏ.ஜௌபர், அட்டாளைச்சேனை உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முஸாபிர், இறக்காமம் உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.நஸீல், அட்டாளைச்சேனை ஜும்மாப் பெரியவாயல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ்.ஜுனைதீன், இறக்காமம் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் ஜெமீல் காரியப்பர், ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் யூ.எம்.வாஹித், ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்கள் எஸ்.எல்.அப்துல் காதர், மௌலவி யூ.எம். நியாஸி, ஓய்வுநிலை அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரி பதிவாளர் எஸ்.எம்.பஸீர், அட்டாளைச்சேனை பிரதேச சபை செயலாளர் எம்.ஐ.எம்.பாயிஸ், திணைக்களத் தலைவர்கள், அரச உத்தியோகத்தர்கள், Merit Educational Services நிறுவனத்தின் நிர்வாகிகள் என அதிகமானோர் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

முகம்மட் றிஸான்...
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

# அயோத்தியில் இராமர் கோயில் அடுத்த வருடம் திறக்கப்படும்

அயோத்தியில் பிரம்மாண்டமாகக் கட்டப்பட்டு வரும் இராமர் கோயிலின் உள்கட்டமைப்பு பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. எதிர்வரும் 2024 ஜனவரி மாதம் இக்கோயில் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அயோத்தியில் இராமர் கோயிலைக் கட்டுவதற்கு நிலவிய சட்டரீதியிலான சிக்கல் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்தான் சரியானது. அங்கு இராமர் கோயிலைக் கட்டஈராமர் கோயில் நிதியமும் அமைக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் கடந்த ஆண்டு விரைவாகத் தொடங்கப்பட்டன.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் 5ஆம் திகதி இந்த கோயிலின் கட்டுமானப் பணிகளுக்குப் பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார். இந்தக் கோயில் 110 ஏக்கர் பரப்பளவில் தயாராகி வருகிறது. இந்தக் கோயிலைக் கட்ட ரூபா 1000 கோடி வரை செலவாகும் என மதிப்பிடப்பட்டது. பொதுமக்கள் அளித்த நன்கொடைகள் மூலம் கோயில் நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போதைய நிலையில் தரை தளம் மற்றும் கர்ப்பக் கிரகம் 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் முடியும் என்று கூறப்படுகிறது. சிற்பங்கள், மற்றும் கோயில் வளாகத்தின் மற்ற வேலைகள் 2025 வரை நடைபெறும் என்றும் கூறப்படுகிறது.

இந்தக் கோயில் ராஜஸ்தான் மாநிலத்தில் இருந்து எடுத்து வரப்பட்ட கற்களினால் கட்டப்படுகிறது. கட்டுமானப் பணிகளில் இரும்பு மற்றும் செங்கற்கள் பயன்படுத்தப் படவில்லை. மூன்று தளங்களைக் கொண்டிருக்கும் இந்தக் கோயிலில், ஐந்து மண்டபங்கள் இருக்கும். பக்தர்களுக்கான தனி மையம், அருங்காட்சியகம், ஆராய்ச்சி மையம், கால்நடை மையம் ஆகியவற்றையும் இந்தக் கோயில் கொண்டிருக்கும்.

இதனிடையே அயோத்தி இராமர் கோயிலை 2024 ஜனவரியில் திறக்க அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக அயோத்தி நகர் முழுவதும் உள்கட்டமைப்பு பணிகள் மேம்படுத்தப்படுகின்றன. ராமர் கோயில் திறக்கப்படுவதை முன்னிட்டு அயோத்தியில் உள்கட்டமைப்பு பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. சகாதத்கஞ்சில் இருந்து நயா காட் செல்லும் 13 கி.மீ. நீள இராம பாதைப்பணிகள் விரைவுபடுத்தப்பட்டு உள்ளன.



அயோத்தி நகரின் விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டு பணிகளுக்கு வியாபாரிகள் எத்தகைய தயக்கமும் இன்றி தங்கள் கடைகள் இருக்கும் இடத்தை வழங்கி வருகிறார்கள். இதற்காக வழங்கப்படும் இழப்பீடு தொகை தொடர்பாக புகார்கள் எதுவும் இல்லை. அயோத்தி நகர விரிவாக்க பணிகளுக்காக அப்புறப்படுத்தப்படும் வியாபாரிகளுக்கு புதிய வணிக வளாகங்களில் கடைகள் நிச்சயம் ஒதுக்கப்படும்.

# நாகலாந்திலும் சூழலை சுத்தமாகப் பேணும் திட்டம்

தத்தமது இருப்பிடங்களை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற இந்திய அரசின் நாடு தழுவிய ஸ்வஷ் பாரத் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்திய மத்திய அரசின் வீடமைப்பு மற்றும் நகர விவகார அமைச்சு கடந்த மே 15ஆம் திகதி நாகலாந்து திமாபூர் நகரில் வேண்டாத பொருட்களை சேகரித்து அகற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டது. உலக சுற்றுச்சூழல் தினமான ஜூன் ஐந்தாம் திகதிவரை இத்திட்டம் நாகலாந்தின் வெள;வேறு இடங்களில் செயற்பாட்டில் இருக்கும். வேண்டாத பொருட்களை குறைத்தல், மீள் சுழற்சி செய்தல் மற்றும் தேவையானவற்றை மீள்பாவனைப் படுத்தல் என்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

உடைகள், காலணிகள், புத்தகங்கள், பத்திரிகைகள், பிளாஸ்டிக் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் வீடுகளில் மேலதிகமாகவும், அவசியமற்றும் காணப்பட்டால் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கும் நிலையங்களில் அவற்றைக் கொடுத்து விடலாம். வோறொருவருக்கு அவற்றில் ஏதாவது ஒரு பொருள் தேவை என்றால் அதை எடுத்துச் செல்லலாம். மீள் சுழற்சியும் செய்யலாம்.

இத்திட்டத்தின் மூலம் பெருமளவு அநாவசிய குப்பைகளை சூழலில் இருந்து அகற்றலாம் எனத் தெரிவித்திருக்கும் டிமாபூர் நகர சபை நிர்வாகம், நகர அரங்கில் ஒரு நிலையத்தை நடத்தி வருகிநது. மேலும் லோங்லெங், அபோய ஆகிய நகரங்களுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப் பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது.

## கிளிநொச்சியில் கணிசமானளவு ...

வனஜீவராசிகள் திணைக்களத்தினாலும் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக துறைசார் அமைச்சர்கள் மற்றும் ஜனாதிபதி ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடனும் ஆவண ரீதியான ஆதாரங்களை முன்வைத்து தொடர்ச்சியான கலந்துரையாடல்களை முன்னெடுத்து வந்ததுடன், நாட்டின் பொருளாதாரத்துக்கு கைகொடுக்கக்கூடிய விவசாயம் மற்றும் நீர்வேளாண்மை செயற்பாடுகள் முடக்கப்பட்டிருக்கின்றதென்ற ஆதங்கத்தையும் வெளிப்படுத்தி வந்தார். இந்நிலையில், வனவளப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் நிறைவேற்று அதிகாரிகளுக்கும் கிளிநொச்சி மாவட்ட துறைசார் அதிகாரிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் (25) கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போது, 1985ஆம் ஆண்டுக்கு முன்னர் விவசாய நிலங்களாகவும் மக்கள் குடியிருப்புகளாகவும் இருந்தமையை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களைக் கொண்ட காணிகளையும் கணிசமானளவு குளங்களையும் விடுவிப்பதற்கு தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

## ஜப்பான் முதலீட்டாளர்களுக்கு...

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தல் மற்றும் திறந்துவிடும் நடவடிக்கைகளை முன்னெடுக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள், புதிய வெளிநாட்டு வர்த்தகங்களை ஈர்ப்பதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பான செயற்பாடுகள் தொடர்பிலும் சுட்டிக்காட்டினார்.

வர்த்தகச் செயற்பாடுகளில் இலங்கைக்கு அத்தியாவசியமான நட்பு நாடாக ஜப்பான் விளங்குவதாகவும் இருநாட்டு உறவுகளையும் பலப்படுத்திக்கொள்வதால் பல்வேறு பயன்களை ஈட்டிக்கொள்ள முடியுமென்றும், ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கையின் அமைவிடம் மற்றும் நாட்டிலுள்ள திறன் விருத்திமிக்க தொழிற்படையின் காரணமாக ஜப்பானிய நிறுவனங்கள் வலயத்திற்குள் தங்களது முன்னெடுப்புகளை மேற்கொள்வதற்கான கதவுகள் திறக்கப்படும் எனவும், ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத்தை பலப்படுத்தும் ஜனாதிபதியின் அர்ப்பணிப்பை இந்த வட்டமேசை மாநாட்டில் கண்டுகொள்ளக்கூடியதாக இருந்தமை சிறப்பம்சமாகும்.

அதனையடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கை – ஜப்பான் பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்துடனான சந்திப்பொன்றிலும் கலந்து கொண்டார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜப்பானிய டிஜிட்டல் மயமாக்கல் அமைச்சர் டாரோ கோனோ (Taro Kono) ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்றும் நடைபெற்றிருந்து.

இதன்போது, டிஜிட்டல் மயமாக்கல் செயற்பாடுகளுக்கான முனைப்புகள் தொடர்பில் ஜனாதிபதி தெளிவுபடுத்தியிருந்ததோடு, டிஜிட்டல் முறைமைக்கு மாறுவதற்கான வேலைத்திட்டங்களின் போது, இரு நாடுகளினதும் தொடர்புகளை பலப்படுத்திக்கொள்வது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் வியட்னாம் பிரதிப் பிரதமர் ட்ரான் லூ குவாங் (Tran Luu Quang) ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்றும் டோக்கியோ நகரில் நடைபெற்றது. இதன்போது, இருதரப்பு உறவுகள் மற்றும் கலாசார தொடர்புகளை பலப்படுத்துவது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

## தற்போதைய, முன்னாள்... 03ஆம் பக்கத் தொடர்

ஆகியோர் இந்த விடயத்தில் முன்னுதாரணமாக செயற்பட வேண்டும்.

அவ்வாறு அவர்கள் முன்னுதாரணமாக செயற்பட்டால் தான் ஏனைய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் அதனை பின்பற்ற முடியும். அவர்களிலிருந்தே இந்த முன்னுதாரணம் ஆரம்பிக்கப்பட வேண்டும். அப்போது தான் நாட்டில் மாற்றம் ஏற்படும்.அவ்வாறின்றேல், நாட்டில் ஊழல் மோசடியை தடுக்க முடியாது. இரண்டாம் வாசிப்புக்கு முன்பதாக முன்னுதாரணத்தின் மூலம் இதனை சிறப்பாக மேற்கொள்ள முடியும்" எனத் தெரிவித்தார்.

## இலங்கையிடமிருந்து... 03ஆம் பக்கத் தொடர்

இந்த கோரிக்கைகளை காப்புறுதியாளர்கள் அல்லது உரிமையாளர்களிடம் சமர்ப்பித்து இழப்பீட்டுக்கான செலவீனத்தை ஏற்கனவே நிறுவப்பட்ட வழிமுறைகள் மூலம் செலுத்த வேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டது.

இலங்கை அரசாங்கத்திடமிருந்து இந்தியாவால் எந்தவிதமான இழப்பீடுகளுமோ அல்லது நட்டஈடுகளோ கோரப்படவில்லை என்பது இங்கு வலியுறுத்திக் கூறப்படுவதுடன், பிராந்தியத்தில் அனைவருக்கும் பாதுகாப்பும் வளர்ச்சியும் என்ற சாகர் கோட்பாடு மற்றும் அயலுறவுக்கு முதலிடம் கொள்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே இந்தியா துரிதகதியில் இக்கப்பல்களை சேவையில் ஈடுபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகுமென்றும், இந்திய உயர்ஸ்தானிகராலயம் குறிப்பிட்டுள்ளது.

## காட்டு யானை தாக்கி... 03ஆம் பக்கத் தொடர்

குளத்துக்கு அருகில் உலாவித்திரிந்த காட்டு யானைகளை பார்வையிடுவதற்கு சென்ற போதே, இந்தச் சம்பவத்தை எதிர்நோக்கியதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## 'மரணத்தில் பூத்த மலையகம்'... 03ஆம் பக்கத் தொடர்

இயக்குநர் அன்ரனி ஜேசுதாசன், மலையக மக்களின் மாண்பை பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் அருட்பணி சக்திவேல், அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான யோதிலிங்கம், அகில இலங்கை தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் பாலசுப்பிரமணியம், யாழ்.மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தலைவர் முரளீதரன், யாழ். பல்கலைக் கழக ஓய்வுநிலைப்பேராசிரியர் கலாநிதி சூசை சிலுவைதாசன், யாழ்.பல்கலைக் கழக ஊழியர் உபசங்கத் தலைவர் யசோதரன், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன், புதியஅதிபர்கள் சங்கத்தின் செயலாளர் சிவசுப்பிரமணியம் நேதாஜி, தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஹர்மன் குமார மலையக தோட்டத் தொழிலாளிகளான திருமதி சலாட் சதாசிவம் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

## அலி சப்ரி ரஹீம் எம்.பி.க்கு... 03ஆம் பக்கத் தொடர்

கட்டடத் தொகுதியில் நேற்று பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தின் போது, இரு தரப்பினரும் இதனை வலியுறுத்தியுள்ளனர்.

நாட்டுக்குள் சட்டவிரோதமாக தங்கம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளை எடுத்து வந்து குற்றவாளியாக இனங்காணப்பட்ட நிலையில் அபராதம் செலுத்தி விடுதலையாகியுள்ள அலி சப்ரி ரஹீம் எம்.பி. யின் செயற்பாட்டினால் ஒட்டுமொத்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாராளுமன்றத்துக்கும் இழுக்கு ஏற்பட்டுள்ளதால் இவரை பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென ஒரு தரப்பினரும் அவர் மீது கடும் ஒழுக்காற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென மற்றுமொரு தரப்பினரும் வலியுறுத்தியுள்ளதுடன், தேவையேற்படின் அலி சப்ரி ரஹீம் மீதான கடும் நடவடிக்கை கோரி 223 பாராளுமன்ற உறுப்பினர்களும் கையொப்பமிட்டு கடிதம் சமர்ப்பிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

## புத்தளம் ஆசிரியர் தாக்குதல்...

21 மாணவர்களும் தலா 5 இலட்சம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை முடிவடைந்த பின்னர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முதல், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இவர்கள் புத்தளம் பொலிஸ் நிலையத்தில் ஆஜராக வேண்டும் என்றும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், எந்தவொரு காரணத்தின் அடிப்படையிலும், முறைப்பாட்டாளர் தரப்பை, அச்சுறுத்தலுக்குள்ளாக்குவது தொடர்பில் அறியக்கிடைத்தால், பிணையை இரத்துச் செய்து, வழக்கு முடிவடையும் வரையில், இவர்களை விளக்கமறியலில் வைப்பதாகவும் நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இவ்வழக்கு, அடுத்த மாதம் 22ஆம் திகதி மீள விசாரணைக்கு அழைக்கப்படவுள்ளது.

## தனியார் கல்வி நிலையங்களும்...

மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது, பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்த போது, "ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் கல்வி நிலையங்களை முற்பகல் 11.00 மணிக்கு பின்னர் ஆரம்பிக்க வேண்டுமென்பதுடன், வாரத்தில் 7 நாட்களிலும் மாலை 6.00 மணியுடன் தனியார் கல்வி நிலையங்கள் மூடப்பட வேண்டும்.

பதிவு செய்யப்படாத தனியார் கல்வி நிலையங்கள் அவசரமாக பதிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்படாவிட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்.

## பாராளுமன்ற ஜனநாயகத்துக்கு...

உரிமைகளை பாதுகாத்த பெருமைக்குரியவரென்றும், பிரதமர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமரர் ஜோசப் மைக்கல் பெரேராவின் அனுதாபப் பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். பாராளுமன்றத்தில் தொடர்ந்து உரையாற்றிய பிரதமர்,

"ஜோசப் மைக்கல் பெரேராவின் நீண்டகால மக்கள் சேவைக்காக அவருக்கு நாம் எமது கௌரவத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிறந்த மனிதாபிமானியும் பல சிறந்த குணாம்சங்களையும் கொண்டவரான மறைந்த சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா, சபாநாயகராகவும் அமைச்சராகவும் எதிர்க்கட்சியின் பிரதம கொரடாவாகவும் அவர் பாராளுமன்றத்தில் அனைவருடனும் மிகவும் நட்புறவுடனும் செயற்பட்டமை சிறப்பம்சமாகும்.

சபாநாயகராக அவர் மேற்கொண்ட பல்வேறு தீர்மானங்கள் முன்னுதாரணமானவை.

1976ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற இடைத்தேர்தலை நாம் விசேடமாக குறிப்பிட வேண்டும். ஜாஎல தொகுதி இடைத்தேர்தல் நாட்டின் அரசியலில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது.

36 வயதில் அவர் அதன்போது பெற்றுக்கொண்ட வெற்றி அடுத்து வந்த பொதுத் தேர்தலில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. ஒரு கிறிஸ்தவர் என்ற வகையில் அவர் அளப்பரிய சேவைகளை செய்துள்ளதுடன், சமூகத்துடன் இணைந்து அவர் மேற்கொண்ட சேவைகள் அவரது வெற்றிகளுக்கு அடித்தளமாகின. விளையாட்டுத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அவர் மிகுந்த கவனம் செலுத்தி வந்துள்ளார்.

பாராளுமன்ற சபாநாயகராக மிகவும் சுயாதீனமாக அவர் செயற்பட்டார். அதற்கான பல சம்பவங்களைக் கூற முடியும்.

சிறு கட்சிகளுக்கும் பாராளுமன்றத் தெரிவுக்குழுக்கள் மற்றும் உரையாற்றுவதற்கான சந்தர்ப்பங்களை பெற்றுக் கொடுத்ததில் அவருக்கு முக்கிய பங்கு உண்டு. எதிர்க்கட்சிகளுக்கும் சுயாதீனமான சிறப்புரிமைகளை வழங்கி பாராளுமன்ற ஜனநாயகத்துக்கு அவர் மேலும் சிறப்புகளைச் சேர்த்தார். தொழில் அமைச்சராகவும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சராகவும் கடற்றொழில் அமைச்சராகவும் பல்வேறு பதவிகளை அவர் வகுத்துள்ளார். அந்தந்தத் துறைகளில் ஏற்பட்ட நெருக்கடிகளின் போது, அவற்றின் தீர்வுகளுக்காக அவர் சிறந்த வழிகளைத் தேர்ந்தெடுத்தார்.

கூட்டுறவுத் துறையை மேம்படுத்துவதற்கு அவர் முன்னெடுத்த நடவடிக்கைகள் சிறப்பானவை" எனத் தெரிவித்தார்.

## விடைத்தாள் மதிப்பீட்டு வருகை...

அதிக தூரத்திலிருந்து வரும் ஆசிரியர்களுக்கு அது 2,900 ரூபாவரை அதிகரிக்கப்பட்டுள்ளது. ஐந்து நாட்களுக்கான முற்கொடுப்பனவை

வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதில் ஏதாவது மாற்றம் இருந்தால், திறைசேரியுடன் பேச்சுவார்த்தை நடத்தி அதனை உடனடியாக பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், அமைச்சர் தெரிவித்தார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் ஆசிரியர்களுக்கான வருகைக் கொடுப்பனவு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிக்கமைய வழங்கப்படாததால், பொருளாதார விஞ்ஞான விடைத்தாள் மதிப்பிடும் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது. எனவே, அது தொடர்பாக துரிதமான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. ரோஹினி குமாரி விஜேரத்ன நேற்று சபையில் கல்வி அமைச்சரிடம் கேட்டுக்கொண்டார்.

அதற்கு பதிலளித்த போதே அவ்வாறு ஏதாவது பிரச்சினைகள் இருப்பின், உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று, கல்வி அமைச்சர் உறுதியளித்தார். பாராளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து அதனை வலியுறுத்திய ரோஹினி குமாரி எம்.பி. அது தொடர்பாக மேலும் தெரிவித்த போது,

"கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் ஆசிரியர்களுக்கான வருகைக் கொடுப்பனவாக 2,000 ரூபா வழங்கப்படுமென்று வழங்கப்பட்ட வாக்குறுதிக்கமைய ஆசிரியர்கள் அந்தக் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும், பொருளாதார விஞ்ஞான விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையை ஆசிரியர்கள் நிறுத்தியுள்ளனர்.

ஏனெனில், 5 நாட்களுக்குள் கொடுப்பனவாக 15ஆயிரம் ரூபா வழங்குவதாக வாக்குறுதி அளித்திருந்த போதும், அதனை வழங்காமல் பரீட்சை ஆணையாளர் நாயகம் 10 ஆயிரம் ரூபாவே வழங்க முடியுமென தெரிவித்திருக்கிறார்.

இந்தப் பிரச்சினை காரணமாகவே விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையிலிருந்து ஆசிரியர்கள் ஒதுங்கிக்கொண்டிருக்கின்றனர். அதேபோன்று கணிதம், விஞ்ஞானப்பாட விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அத்துடன், திங்கட்கிழமை கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை ஆரம்பமாகின்றது. ஆனால், மாணவர்களின் மீள் திருத்தப் பெறுபேறுகள் இன்னும் வெளிவரவில்லை. இதனால், மாணவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அநீதி தொடர்பில் கல்வி அமைச்சு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அவர் கேட்டுக்கொண்டார்.

## 07 மில். மக்களுக்கு உதவும் நோக்கில் ...

சபையாலும் அதன் கிளை அமைப்புகளாலும் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளை உள்ளடக்கி இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு,

" இலங்கை மக்களை பொறுத்தமட்டில் குறிப்பாக, பின்தங்கிய சமூகப்பிரிவினருக்கு கடந்த 2022ஆம் ஆண்டு மிகவும் கடினமான காலப்பகுதியாகவே அமைந்திருந்தது. ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்விநியோகத்தடை, உயர் பணவீக்கம், வாழ்க்கைச்செலவு உயர்வு, அரசியல் ரீதியில் ஏற்பட்ட மாறுதல்கள் என்பன மக்களின் அன்றாட வாழ்வில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியதுடன், உடனடி மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் நிலைக்கு அவர்களைத் தள்ளியது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் பொதுமக்கள் கடுமையான நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்தமை தொடர்பாக எமது தீவிர கரிசனையை வெளிப்படுத்தும் அதேவேளை, அத்தியாவசிய உதவிகள் தேவைப்படுவோருக்கு எம்மால் இயன்ற உதவிகளை வழங்குவதில் நாம் கொண்டிருக்கும் அர்ப்பணிப்புடன் கூடிய கடப்பாட்டை மீள் உறுதிப்படுத்துகின்றோம்.

இவ்வாறானதொரு பின்னணியில் ஐக்கிய நாடுகள் சபையானது இலங்கைக்கு அவசியமான குறிப்பிடத்தக்களவிலான மனிதாபிமான உதவிகளை வழங்கியிருந்ததுடன், விரிவான சமூக, பொருளாதார மீட்சிக்கும் பங்களிப்புச் செய்திருந்தது. அதன்படி, சுமார் 2.9 மில்லியன் மக்களுக்கு அதாவது, நாட்டின் மொத்த சனத்தொகையில் 10 சதவீதமானோருக்கு அவசியமான உடனடி உதவிகள், ஐக்கிய நாடுகள் சபையின் கிளைக்கட்டமைப்புக்களால் வழங்கப்பட்டன.

மேலும், ஐக்கிய நாடுகள் சபையானது கடந்தாண்டு இலங்கை தொடர்பாக அதன் ஐந்து வருடகால நிலைபேறான அபிவிருத்தி செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைத்தது. இருப்பினும் கூட, மிகவும் பின்தங்கிய சமூகப்பிரிவினர் வெகுவாகப் பாதிப்படையக்கூடிய வகையிலான நெருக்கடி நிலைக்கும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதில் பல்வேறு சவால்களுக்கும் இலங்கை தொடர்ந்து முகங்கொடுத்துக்கொண்டிருந்தது. ஆனால், மறுபுறம் இலங்கைக்கும் சர்வதேச நிதியியல் கட்டமைப்புகளுக்குமிடையிலான ஒத்துழைப்பில் குறிப்பிட்டுக் கூறத்தக்க முன்னேற்றம் தென்பட்டது.

அதேவேளை, கடந்த 2022ஆம் ஆண்டு இலங்கையின் மொத்த சனத்தொகையில் சுமார் 7 மில்லியன் மக்களுக்கு உடனடி மனிதாபிமான உதவிகள் தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டதுடன், இதுவரை அவர்களில் 2.9 மில்லியன் பேருக்கு அவசியமான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அது மாத்திரமன்றி, அவர்களுக்கு உதவுவதற்கென சர்வதேச நாடுகள், இருதரப்பு மற்றும் பல்தரப்பு பங்காளிகள், நன்கொடையாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடமிருந்து மொத்தமாக 123.5 மில்லியன் டொலர் நிதி திரட்டப்பட்டுள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 52,000 ஆசிரியர்களை... 03ஆம் பக்கத் தொடர்

பற்றாக்குறை தொடர்பாக ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியினர் கேள்விகளை எழுப்பி வருகின்றனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஆலோசனை தெரிவுக்குழுவில்

2018ஆம் 2019ஆம் 2020ஆம் ஆண்டுகளில் வேலையற்ற பட்டதாரிகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டனர்.

இதற்காக 53 ஆயிரம் பேர் விண்ணப்பித்திருந்தனர். அரசாங்கமானது அமைச்சுகள், அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளுக்கும் அவர்களை பயிற்சிகளுக்காக இணைத்துக்கொண்டது. அவர்களின் 22 ஆயிரம் பேர் மாகாண அடிப்படையில் பொது நிர்வாக அமைச்சினால் பாடசாலைகளுக்கு இணைத்துக்கொள்ளப்பட்டனர். ஒரு குழுவினர் பிரதேச செயலகங்களிலும் மற்றுமொரு குழுவினர் அரசாங்க நிறுவனங்களிலும் அவ்வாறு இணைத்துக்கொள்ளப்பட்டனர். அவர்கள் தற்போது அரசாங்க ஊழியர்களாக சம்பளம் பெற்று வருகின்றனர்.

அந்த வகையில், அரசாங்கப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு, அரசு சேவை ஆணைக்குழுவின் இணக்கத்தையும் பெற்றுக்கொண்டு, அவர்களுக்கான பரீட்சையொன்றை நடத்தி, பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் மாகாண மட்டத்தில் நேர்முகப் பரீட்சையையும் நடத்தி, அவர்களை பயிற்சியாளர்களாக நியமித்து மூன்று வருடங்களின் பின்னர், தேசிய கல்வி நிறுவனத்தினால் வழங்கப்படும் ஆசிரிய பதவிகளுக்கான பட்டம் வழங்கி, நிரந்தர நியமனத்துக்கான வர்த்தமானியும் வெளியிடப்பட்டது.

ஆசிரியர் பதவிக்காக பட்டதாரிகளை நியமிக்கும் போது, 35 வயதுக்கு கீழ்ப் பட்டவர்களே அதற்காக நியமிக்கப்படுவர். அவ்வாறு நியமிக்கப்படும் போது, அவர்களுக்கு பரீட்சையொன்றை நடத்தி, அதன் பின் நேர்முகப் பரீட்சையின் மூலமே அவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

பின்னர், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க 35 வயது முதல் 40 வயதாக மாற்றப்பட்டு விண்ணப்பம் கோரப்பட்டது. அதற்காக 52,000 விண்ணப்பங்கள் ஆசிரியர் பதவிகளுக்காக கிடைத்தன.

கடந்த மார்ச் மாதத்தில் அவர்களுக்கான எழுத்துமூல பரீட்சைக்கு அறிவிப்பு விடுத்திருந்த நிலையில், அதற்கு எதிராக சில மனுக்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. அதனையடுத்து, உச்ச நீதிமன்றம் அந்தப் பரீட்சையை இடைநிறுத்த உத்தரவு பிறப்பித்தது.

மார்ச் மாதம் அவ்வாறு இடம்பெறவில்லையென்றால், நாம் இந்த வருடத்துக்குள் அவர்களுக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்க தீர்மானித்திருந்தோம். நீதிமன்ற உத்தரவுக்கமைய அனைத்து நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டன.

இந்த விடயம் தொடர்பாக நாம் குறித்த பரீட்சையை நடத்துவதற்கு அனுமதி கோரி சட்டமா அதிபரினூடாக உச்ச நீதிமன்றம் செல்ல தீர்மானித்துள்ளோம். அந்த வகையில், விரைவில் இந்த ஆசிரிய நியமனங்களை வழங்குவதற்கு முதலில் அவர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கும் எதிர்பார்த்துள்ளோம் .

இதேவேளை, கல்வியியல் கல்லூரிகளிலிருந்து 7,500 ஆசிரியர்களை ஜுலை 15ஆம் திகதி நியமிக்கவும் அத்தியாவசிய பாடங்களுக்காக மேலும் சில பட்டதாரிகளை விரைவில் இணைத்துக் கொள்ளவும் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது" என்றார்.

## ஜனாதிபதியின் ஆலோசகராக...

*உறுப்பினராக அமைச்சுப்பதவிகள் உட்பட பல்வேறு முக்கிய பதவிகளை வகித்துள்ளார். 2001 ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டு வரை மலேசியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராகப் பதவி வகித்த ரோஸி சேனாநாயக்க, 2009ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மேல் மாகாணசபையின் எதிர்க்கட்சி தலைவராகவும் செயற்பட்டுள்ளார்.*

*சிறுவர் விவகாரங்கள் தொடர்பான இராஜாங்க அமைச்சராக 2015 இல் பதவி வகித்த அவர், பிரதமரின் பேச்சாளராகவும் பிரதமர் அலுவலக பிரதானியாகவும் பதவி வகித்துள்ளார்.*

*சமூக செயற்பாட்டாளராக ஆரம்பக்காலங்களில் இருந்த ரோஸி சேனாநாயக்க, 1980 இல் இலங்கை அழகு ராணியாகவும் 1984 இல் திருமணமான உலக அழகியாகவும் மகுடம் சூடியவராவார்.*

*பின் தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்த அவர், 2018 இல் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் போட்டியிட்டு கொழும்பு மாநகர மேயராகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.*

## இந்தியத் தூதுவருடன் கிழக்கு...

*மேலும், Alliance Air சேவையை யாழ்ப்பாணத்திலிருந்து கிழக்கு விமான நிலையங்களுக்கு நீடிப்பதற்கும் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் யாழ்ப்பாணத்தைப் போன்று கிழக்கிலும் ரயில் பாதையை மேம்படுத்துவதற்கும் இதன்போது கோரிக்கை முன்வைக்கப்பட்டது. கிழக்கில் புதிய வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.*

## QR முறையிலான ஒதுக்கீட்டை ...

*அதிகரிக்கப்படுமென, அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.*

*பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நிதி, வர்த்தக மற்றும் சந்தைப்படுத்தல் திணைக்களங்களுடன் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற கலந்துரையாடலின் போது, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக, அமைச்சர் தெரிவித்துள்ளார்.*

*அமைச்சர் கஞ்சன விஜேசேகர தலைமையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதி, வர்த்தக மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவுகளுடன் நேற்று முன்தினம பிற்பகல் இந்தக் கூட்டம் நடைபெற்றது.*

## 20 தேங்காய்கள் திருடியவருக்கு...

*எதிராக சுமத்தப்பட்டன. இதில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட இந்த நபரை இரண்டு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 10 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனையை மினுவாங்கொடை நீதவான் விதித்துள்ளார்.*

*குற்றஞ்சாட்டப்பட்டவர், இந்தக் குற்றங்களை தான் செய்யவில்லையெனத் தெரிவித்துள்ளார். எனினும், கைவிரல் அடையாளங்களின் பிரகாரம் இவர் குற்றவாளியாக இனங்காணப்பட்டார். இதனடிப்படையில் ஒரு வருடம் ஒத்திவைக்கப்பட்ட 10 வருட கடூழிய சிறைத்தண்டனை இவருக்கு விதிக்கப்பட்டுள்ளது.*

*குற்றஞ்சாட்டப்பட்டு குற்றவாளியாக இனங்காணப்பட்ட திவுலுப்பிட்டியவைச் சேர்ந்த இந்த நபர், 2021 ஜனவரி 31ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த நாளொன்றில் இந்த திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டிருந்தார்.*

## தமிழரசு கட்சியின் தலைமையை ...

*இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,*

*"நான் பதவிக்காக கட்சிக்குள் போகவில்லை. முரண்பாடு இல்லாத நிலை ஏற்பட்டு அனைவரும் ஏகமனதாக தெரிவு செய்யப்படுவார்களாக இருந்தால், போட்டியில்லாது அனைவரதும் ஒத்துழைப்போடும் இணக்கப்பாட்டோடும் தெரிவு செய்தால் அதை நான் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையிலுள்ளேன். ஒருமனதாக முரண்பாடு இல்லாமல் தெரிவு செய்யப்பட்டால், நான் அந்த கடமையை செய்யக்கூடிய ஆற்றல் பொறுப்பு எனக்குள்ளது. அதற்காக நான் யாரையும் குறை சொல்லியோ யாரையும் கழுத்தறுத்து பதவிக்கு வர விரும்பவில்லை. தலைமைக்கு தகுதியுடையவரென என்னை பலர் கேட்கின்றனர், கூறுகின்றனரென்பது உண்மையாக இருந்தாலும் கூட, எங்களுடைய கட்சி ஒற்றுமையாக போக வேண்டும். ஒருமனதாக போக வேண்டும் என்ற எண்ணம் எனக்குள்ளது. அவ்வாறு இணக்கப்பாடு வந்தால், அதை நான் ஏற்றுக்கொள்வேன்" எனத் தெரிவித்தார்.*

## எரிபொருள் வணிகத்துக்கு மூன்றாம்...

இதனையடுத்து, சினோபெக் நிறுவனம் எரிபொருள் விற்பனை செய்வதற்கு வேறு வெளி நிறுவனங்களை பயன்படுத்துவதாக தகவல்கள் வெளியாகின.

இதனை மறுத்துள்ள சினோபெக் நிறுவனம், தமது வணிகத்துக்காக மூன்றாம் தரப்பினரை தொடர்பு கொள்ளவில்லையென குறிப்பிட்டுள்ளது.

## யாழ். நகரில் வாள்வெட்டுக்குழு ...

இடம்பெற்றிருக்கலாமெனவும் தாக்குதலில் படுகாயமடைந்தவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## 35 வீத பெறுமதிசேர் வரி...

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, துறைமுகத்தினூடாக மீள் ஏற்றுமதியின் போது, முறையான பெறுமதிசேர் வரி அறவிடப்படுவதில்லையென சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் கேள்விக்கு பதிலளித்த போதே, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

# கிழக்கின் குரல்



## கிழக்கில் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள நீர்விநியோக பிரச்சினைக்கு தீர்வு

### அமைச்சர் ஜீவன் தொண்டமான்

**தம்பலகாமம் குறூப் நிருபர்**



கிழக்கில் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள நீர் விநியோக பிரச்சினையை சரிசெய்ய, உள்ளூராட்சி மன்றங்களுக்கு புதிய தண்ணீர் குழாய்களை வழங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் விருப்பம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் குடி நீர் விருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நீர்வழங்கல் அமைச்சில் நேற்று முன்தினம் (25) நடைபெற்றது.

அதில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மாகாண பிரதம செயலாளர் மற்றும் பிற அமைச்சக அதிகாரிகள் ஆகியோர், நீர்வழங்கல் அமைச்சர் ஜீவன் தொண்டமானை சந்தித்து, கிழக்கு மாகாணத்தில் நீர் விநியோகத்தை மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

மேலும் உள்ளூராட்சி மன்றத்தின் ஊடாக நீர்குழாய்கள் மக்கள் பாவனைக்கு வழங்கப்படும் என தெரிவித்தார். இச்சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரமேஷ்வரனும் கலந்து கொண்டிருந்தார்.

## உகந்தை மலை ஸ்ரீ முருகன் ஆலயத்திற்கு பொதுச்சபை அமைப்பதற்கான கூட்டம்

**சவளக்கடை குறூப் நிருபர்**

அம்பாறை உகந்தை மலை ஸ்ரீ முருகன் ஆலயத்திற்கான பொதுச் சபை ஒன்றை அமைப்பதற்கான ஆரம்பக்கட்ட கலந்துரையாடல் கூட்டம் எதிர்வரும் 2023.06.09ம் திகதி காலை 10 மணிக்கு லாகுகலை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக லாகுகலை பிரதேச செயலாளர் ந. நவநீதராஜா தெரிவித்தார்.

நம்பிக்கை பொறுப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 102 இற்கு அமைய பிர தேச செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் முடிவின் படியும் மற்றும் பொத்துவில் நீதவான் நீதிமன்றத்தினால் கோப்பிடப்பட்டுள்ள வழக்கின் 2023.05.23ம் திகதிய விசாரணையின்போது நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படியும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வழிகாட்டுதலுக்கு அமையவும் உகந்தை மலை முருகன் ஆலயம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகையில் இக்கூட்டம் இடம்பெறவுள்ளது. உகந்தை மலை ஸ்ரீ முருகன் ஆலயத்தின் பொதுச் சபையில் அங்கம் வகிக்க ஆர்வமுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி தொடக்கம் அம்பாரை மாவட்டத்தின் பாணம வரையிலான பிரதேசத்தில் நிரந்தரமாக வசிக்கும் இந்து மதத்தை பின்பற்றும் பொது மக்கள் தங்களது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களோடும் இந்து சமயத்தவரது பண்பாட்டு விழுமியங்களோடும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள முடியுமெனலாகுகல பிரதேச செயலாளர் ந.நவநீதராஜா மேலும் தெரிவித்தார்.

## நிலவின் கர்ப்பங்கள் நூல் வெளியீட்டு விழா

**காரைதீவு குறூப் நிருபர்**




காரைதீவின் இளங்கவிஞர் விபுலசசியின் 'நிலவின் கர்ப்பங்கள்' கவிதைநூல் வெளியீட்டு விழா இன்று (27) சனிக்கிழமை மாலை 3 மணிக்கு காரைதீவில் நடைபெறும்.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பிக்கிறார்.

தாதிய உத்தியோகத்தரான மனோகரன் சசிப்பிரியனின் கன்னி கவிதை நூல் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலை மாவட்ட செயலக வளாகத்தில் நடமாடும் சேவை

**அன்புவழிபுரம் தினகரன் நிருபர்**





திருகோணமலை மாவட்ட செயலகம், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் தனிநபர்களின் சட்ட ஆவணங்கள் தொடர்பான சிக்கல்களை தீர்ப்பது மற்றும் வேறு சட்ட உதவிகளை வழங்குவதற்குமான நடமாடும் சேவையானது நேற்று (26) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு திருகோணமலை மாவட்ட செயலக வளாகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி சட்டத்தரணி நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் பங்குபற்றலுடன் நடைபெற்ற நிகழ்வில் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்தியாவிலிருந்து வருகை தந்து மீண்டும் குடியிருக்கும் இலங்கை அகதிகள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை நோக்காகக் கொண்டு இந்நடமாடும் சேவை நடைபெற்றது.

பாதுகாப்பு அமைச்சு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், குடிவரவு குடியகல்வுத் திணைக்களம், தலைமைப் பதிவாளர் திணைக்களம், மாகாண காணி ஆணையாளர் அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம்,காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம், தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகம்,

மத்தியஸ்த சபை ஆணைக்குழு மற்றும் சட்ட சபை ஆணைக்குழு ஆகிய நிறுவனங்கள் இதில் பங்கெடுக்கின்றன.



பட்டிருப்பு கல்வி வலயத்திலுள்ள மட்/பட்/ கோவில் போரதீவு விவேகானந்த மகா வித்தியாலயத்தில் பிரதி அதிபராகப் பணியாற்றி அரச சேவையில் இருந்து இளைப்பாறிய த. குணநாயகத்திற்கான சேவைநலன் பாராட்டு விழா வித்தியாலய அதிபர் சா.பரமானந்தம் தலைமையில் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படம். (படம்: துறைநீலாவணை நிருபர்)

## புதிய ஆளுநரின் வருகை மூவின மக்களுக்கும் நம்பிக்கையை ஏற்படுத்துகிறது

**காரைதீவு குறூப் நிருபர்**

கடந்த 33 வருடங்களாக மாறிமாறி வந்த ஆளுநர்கள் தமிழ் மக்களின் உரிமைகளோடு விளையாடியதை நாங்கள் மறக்கவில்லை. தொல்பொருள் என்ற ரீதியிலும் பொது தேவை என்ற ரீதியிலும் தமிழ் மக்களின் காணிகள் நிலங்கள் சூறையாடப்பட்ட வரலாறு இருந்தது. அது மாத்திரமல்ல அதிகாரிகள் மட்டத்திலும் தான்தோன்றித்தனமாக நடக்க அது வழிவகுத்தது. ஆனால் புதிய ஆளுநர் செந்தில் தொண்டமானின் வருகை கிழக்கில் உள்ள மூவின மக்களுக்கும் நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது. அவரது நல்ல செயற்பாடுகள் அனைத்திற்கும் நாம் பக்கபலமாக நிற்போம்.

இவ்வாறு புதிய ஆளுநரின் மனிதாபிமான நிவாரண உதவியை வழங்கி வைத்து உரையாற்றிய காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில். தெரிவித்தார்.

புதிய ஆளுநர் செந்தில் தொண்டமானின் சீனாவின் அனுசரணையூடான மனிதாபிமான உலர் உணவு நிவாரண பொதிகளை விதவை தாய்மார்களுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (25) காரைதீவில் நடைபெற்றது.



சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிவாரணம் வழங்கல் நிகழ்வில் முன்னாள் தவிசாளர் மேலும் உரையாற்றுகையில்.

ஒரு வார காலத்துக்குள் இந்த நிவாரண பொதிகள் வசதி குறைந்த ஏழைகளுக்கு வழங்கப்படுவது உண்மையிலேயே வரவேற்புக்கு உரியது. இது நல்லதொரு நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

அவரோடு இணைந்து நல்ல பணிகளுக்கு நாங்களும் கரம் கோர்ப்போம். முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த காரைதீவு மண் நல்லவர்களோடு நல்ல விடயங்களுக்காக என்றும் பயணிக்கும். என்றார்.

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

**றொட்டவெவ குறூப் நிருபர்**


உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேக நபரொருவரை கைது செய்துள்ளதாக மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை திம்பிரிவெவ பிரதேசத்தில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியை மறைத்து வைத்துக் கொண்டு மிருகங்களை வேட்டையாடி வருவதாக பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைவாக குறித்த இடத்துக்கு சென்ற பொலிஸார் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேக நபரொருவரை கைது செய்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் மஹதிவுல்வெவ 01ம் வட்டாரத்தில் வசித்து வரும் அப்புஹாமிகே வீரசேகர (65வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபரை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

## வான்எல பகுதியில் காட்டு யானை தாக்கி வீடுடைப்பு

**கந்தளாய் தினகரன் நிருபர்**



திருகோண மலை, வான்எல பொலிஸ் பிரிவு க்குட்பட்ட பகுதியில் காட்டு யானைகள் வீடொன்றினை உடைத்து சேதப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஜயந்திபுர பகுதியிலே இச்சம்பவம் நேற்று அதிகாலை (26) இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

அண்மைக் காலமாக ஜயந்திபுர பகுதியில் யானைகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீட்டில் உள்ளோருக்கு எவ்வித உயிர் சேதங்கள் ஏற்படாத போதிலும் வீட்டின் ஒரு பகுதியை உடைத்து சேதப்படுத்தியுள்ளதாகவும், வீட்டுபகரணங்கள், உணவு பாத்திரங்களை காட்டு யானை எடுத்து வீசியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக வனஜீவராசி அதிகாரிகளுக்கும் பொலிஸாரும் முறையிட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

யானை வேலிகள் அமைக்கப்பட்டும் வேலிகளை உடைத்துக் கொண்டு கிராமத்திற்குள் புகுவதாகவும் தெரிவிக்கின்றனர். இப்பகுதியில் அடிக்கடி யானைகளினால் உயிர் சேதங்களும் ஏற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சி நெறி



**தம்பலகாமம் குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சி நெறியை பூர்த்தி செய்த 50 ஆசிரியைகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு (25) மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் பி. எச். என். ஜயவிக்ரம பிரதம அதிதியாக கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

திருகோணமலை பட்டினமும் சூழலும் மற்றும் மூதூர் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் பதிவு செய்யப்பட்ட முன்பள்ளி ஆசிரியைகளுக்கே இப்பயிற்சிநெறி நடாத்தப்பட்டது.

முன்பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகம் மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு உலக வங்கி நிதி அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வளத்தாப்பட்டியில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

**(காரைதீவு குறூப் நிருபர்)**

சம்மாந்துறை வலயத்திலுள்ள மிகவும் பின்தங்கிய புதிய வளத்தாப்பிட்டி நாவலர் வித்தியாலயத்தில் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அதிபர் கே. கணேஷ் தலைமையில் நடைபெற்றது.

சம்மாந்துறை நஜா பவுண்டேஷன் அமைப்பினரால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக் கல்வி பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா கலந்து சிறப்பித்திருந்தார்.

கௌரவ அதிதிகளாக உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா பவுண்டேஷன் சார்பில் தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் ஐநூல் ஜாரியா நபீர் கலந்து சிறப்பித்தார். கௌரவ அதிதியாக ஆசிரிய ஆலோசகர் இசட் எம். றிஸ்வி கலந்து சிறப்பித்தார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களுக்கும் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

## பொத்துவில் நாவலாற்றில் சிரமதான வேலைத்திட்டம்

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

பொத்துவில் நாவலாற்று பிரதேசத்தில் விசேட சிரமதான வேலைத்திட்டமொன்று புதன்கிழமை (24) பிரதேச சபையின் செயலாளர் ஏ.எம்.ஹபீபுர் ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது.

இதில் பொத்துவில் பிரதேச சபை ஊழியர்கள், சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர்கள், வை.எம்.ஏ.ஏ பொத்துவில் கிளையின் உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



அக்கரைப்பற்று தொழில்நுட்ப கல்லூரியின் பதிவாளராக அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றிய எம். ஏ.சி. றக்கீப் (25) கடமையை பொறுப்பேற்றுக் கொண்ட போது...

(படம்: பாலமுனை தினகரன் நிருபர்)

# ஸ்ரீ தலதா மாளிகை தியவதன நிலமேக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

எம்.ஏ.அமீனுல்லா



ஸ்ரீ தலதா மாளிகையின் வரவு செலவு கணக்குகளை சமர்ப்பிக்காமை தொடர்பாக தியவதன நிலமே பிரதீப் நிலங்க தேலவுக்கு எதிராக முன்னாள் பஸ்நாயக்க நிலமே சுதந்த சேனாநாயக்கவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

மேலும் பிரதீப் நிலங்க தேலாவுக்கு நீதிமன்றக் கட்டணமாக பஸ்நாயக்க நிலமே சுதந்த சேனாநாயக்க ஒரு இலட்சம் ரூபாவை செலுத்த உச்ச நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பும் கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.எஸ்.எஸ்.சபுவிதவினால் அறிவிக்கப்பட்டது.

அதன்படி சுதந்த சேனாநாயக்க அவர்கள் உரிய தொகையை தியவதன நிலமே பிரதீப் நிலங்க தேலவிடம் நீதிமன்றத்தில் வைத்து வழங்கினார்.

2012ஆம் ஆண்டு ஸ்ரீ தலதா மாளிகையின் வரவு செலவு கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படவில்லை என கண்டி நீதவான் நீதிமன்றில் சுதந்த சேனாநாயக்க வழக்குத் தாக்கல் செய்தார்.

வழக்கு விசாரணைக்கு வரவிருந்த வேளையில், தியவதன நிலமே இதனை எதிர்த்து திருத்த மனுவொன்றை சமர்ப்பித்ததன் பிரகாரம் மேல் நீதிமன்ற நீதிபதிகள் வழக்கை தள்ளுபடி செய்தனர்.

சுதந்த சேனாநாயக்க நான்கு காலாண்டுகள் தொடர்பிலான கணக்கு அறிக்கைகளை முறையாக சமர்ப்பிக்கவில்லை எனக் கூறி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# நடமாடும் சேவை

வலப்பனை பிரதேச செயலகத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளக்கூடிய அரச சேவைகளை இலகுவாக வழங்கும் நோக்கில் இராகலை பிரதேச சபை மண்டபத்தில் நடமாடும் சேவையொன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

வலப்பனை பிரதேச செயலாளர் எஸ்.பி.லிந்தகும்பர தலைமையில் இராகலை பிரதேசத்துக்குட்பட்ட இராகலை, சமஹிபுர, டெல்மார், புரூக்சைட், செனரத்புர, இராகலை தோட்டம், சென் லெணாட்ஸ் உள்ளிட்ட எட்டு கிராமசேவகர் பகுதியில் வசிக்கும் மக்கள் இச்சேவையின் ஊடாக பயன்பெற முடியும்.

இதில் பிறப்பு, இறப்பு, ஆட் பதிவு ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்கள், காணி தொடர்பான பத்திரங்கள், தெளிவூட்டல்கள், தொழில் வழிகாட்டல்கள், சமுர்த்தி, மற்றும் ஆயுர்வேத வைத்திய சேவை என பல சேவைகள் முன்னெடுக்கப்பட்டன.

ரமேஷ்

# கம்பளையில் நடமாடும் சேவை



கம்பளை நிருபர்

கம்பளை தொழுவ பிரதேச செயலாளர் யமுனா தயாரத்தின தலைமையில் நடமாடும் சேவையொன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டது. தொழுவ பிரதேச செயலகத்துக்குட்பட்ட 30ற்கும் மேற்பட்ட மக்கள் நேற்று மொரகொல்ல மொரேன போதி விகாரை வளாகத்திற்கு வருகை தந்திருந்தனர்.

பிறப்பு சான்றிதழ், அடையாள அட்டை, பொலிஸ் முறைப்பாடு பதிவுகள், மூக்குகண்ணாடிகள் வழங்குதல் போன்றவற்றுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கும் முகமாக இச்சேவை முன்னெடுக்கப்பட்டது. இதில் அதிகமான மக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

மேலும் சுயதொழில் செய்பவர்களுக்கு இங்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் போன்ற வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.







மலையக மக்களின் 200 வருட வாழ்க்கையை சித்தரிக்கும் வகையில் இராகலை உயர் நிலை தேசிய பாடசாலை கலாசார பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட நிகழ்வுகள் பாடசாலையில் நேற்றைய தினம் இடம்பெற்றன. ஆவணப்பட கண்காட்சிகள், பச்சை தங்கம் திரையிடல், பறை இசை, வீதி நாடகம், உள்ளிட்ட கலை கலாசார நிகழ்வுகளுடன் சிறப்பு உரைகளும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அதிபர் மை.பன்னீர் செல்வம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உதவி கல்விப் பணிப்பாளர்களான எஸ்.சற்குனராஜா, ஆர்.நேசராஜா உள்ளிட்ட ஆசிரியர் ஆலோசகர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(படங்கள் ஆ.ரமேஸ்)

# நுவரெலியா கிரகரி வாவியை தூய்மைப்படுத்தும் திட்டம் ஆரம்பம்

## பிளாஸ்டிக் கழிவுகளால் சுற்றுச்சூழலுக்கு ஆபத்து

உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை பெரிதும் கவர்ந்த நுவரெலியா கிரகரி வாவியை தூய்மைப் படுத்தும் நடவடிக்கைகள் மாநகரசபையினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதிக்கு நாளாந்தம் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர்.

கிரகரி வாவியில் பாசிச் செடிகள் படர்ந்து வாவி முழுவதும் குவியல் குவியலாக உள்ளதை காணமுடிகின்றது. இதனை அகற்றும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

மேலும் கரைகளிலுள்ள புதர்களை அகற்றல், கிரகரி வாவி முழுவதும் மிதக்கும் பிளாஸ்டிக் குப்பைகளையும் கழிவுப்பொருட்களையும் அகற்றல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஜே.சி.பி இயந்திரத்தை பயன்படுத்தி ஆழப்படுத்தியும் அகலப்படுத்தியும் வருகின்றனர்.



இதன்போது பெருமளவான கழிவுப்பொருட்கள் வாவிக்கரையிலிருந்து மீட்கப்பட்டது. இது எதிர்காலத்தில் சுற்றுச்சூழலுக்கும் வாவிக்கும் ஆபத்தினை ஏற்படுத்தும் என மாநகரசபை விசேட ஆணையாளர் சுஜீவ போதிமான கருத்து தெரிவித்தார்.

# சப்ரகமுவ பல்கலைக்கழகத்தால் குறைந்த விலையில் கோழி உணவு உற்பத்தி

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

சப்ரகமுவ பல்கலைக்கழக விவசாயபீடம் குறைந்த விலையில் கோழி உணவு உற்பத்தி செய்யும் வேலைத் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் உதய ரத்னாயக்க தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இப்பீடத்தின் விரிவுரையாளர்கள் உட்பட ஏனைய முக்கியஸ்தர்கள் துறைசார் நிபுணர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

சந்தையில் கோழி மற்றும் கோழி உற்பத்தி மற்றும் கோழி உணவுப்பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. குறைந்த விலையில் கோழி உணவை உற்பத்தி செய்து நாட்டுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் இம்முயற்சி ஆரம்பிக்கப்பட்டதாக இந்நிகழ்வில் உரையாற்றிய துணைவேந்தர் உட்பட அதிகாரிகள் பலரும் தெரிவித்தனர்.

உள்நாட்டின் மூலப் பொருட்களைக் கொண்டு குறைந்த விலையில் கோழி உணவினை உற்பத்தி செய்யும் முறை பற்றிய செயற்பாடுகளும் இங்கு காண்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கின் உதயம்

# மன்னார் மாவட்ட ஆராய்ச்சி தொகுப்பு மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிப்பு

மன்னார் குறூப் நிருபர்



மன்னார் மாவட்டத்தில் இடம்பெறும் பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை, பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் பெண்கள் எதிர்கொள்ளும் மனநலரீதியான பிரச்சினைகள் தொடர்பில் கடந்த மூன்று வருடங்கள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தொகுப்பு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டிமெலிடம் வைபவரீதியாக கையளிக்கப்பட்டது.

சிரேஷ்ட சமூக செயற்பாட்டாளர் பேதுரு பெனடிக்ற்றினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு மன்னார் மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த ஆய்வு தொகுப்பின் இறுதி வடிவம் வைபவரீதியாக நேற்று (26) கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆய்வு தொகுப்பில் மாவட்ட ரீதியாக பெண்கள் எதிர்கொள்ளும் பால்நிலை சார் வன்முறைகள் தொடர்பிலும் பால்நிலை வன்முறைகள் தடுப்பு தொடர்பில் கையாளப்பட வேண்டிய அணுகுமுறை தொடர்பிலும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

அதேநேரம் மன்னார் மாவட்டத்தின் புராதன இடங்கள் மற்றும் மாவட்டத்தில் வழக்கொழிந்து செல்லும் பாரம்பரிய தொழில் முறைகள் தொடர்பிலும் பல வகையான தரவுகள் குறித்த ஆய்வு கையேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் ஞான வைரவர் ஆலய வருடாந்த உற்சவம் (24) சிறப்பாக இடம்பெற்றது. நேற்று காலை சங்காபிஷேகம் இடம் பெற்று பகல் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து இரவு விசேட பூசைகள் இடம்பெற்று வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து எம்பெருமான் எழுந்தருளி உள்வீதி, வெளிவீதி வலம் வந்து அடியவர்களுக்கெல்லாம் அருள்பாலித்தார். பக்தர்கள் காவடி, பால்செம்பு, கற்பூரச்சட்டி என நேர்த்திக் கடன்களையும் நிறைவேற்றிக்கொண்டனர்.

(படம் மாங்குளம் குரூப் நிருபர்)

# கிளிநொச்சி மக்களுக்கு இலவச குழாய் வழி குடிநீர் திட்டத்தை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை

கிளிநொச்சி குறூப் நிருபர்

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப்பிரிவுக் குட்பட்ட பாரதிபுரம், பொன்னகர் கிராமங்களுக்கான இலவச குடிநீர் விநியோகத்துக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான நடமாடும் சேவை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இலவச குடிநீர் விநியோகத்தை வழங்கும் முகமாக இந்த நடமாடும் சேவை இடம்பெற்றது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நடமாடும் சேவை மூலம் இலவச குடிநீர் இணைப்பை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்களை பெற்று பூரணப்படுத்தி 1500 ரூபா வைப்பு பணத்துடன் சமர்பிக்க வேண்டும். இதுவரை விண்ணப்ப படிவங்களை செலுத்தாதவர்கள், உடனடியாக அதனை பெற்று எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்கு (30) முன்னதாக கிளிநொச்சி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அலுவலகத்தில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை 1500 பணத்தை செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். இதன்மூலம் வீடுகளுக்கான இலவச குழாய் வழி குடிநீர் இணைப்பை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் இச்சந்தர்ப்பத்தை தவறாது பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் அறிவித்துள்ளனர்.

# 'ஜூன் மாதம் திரைக்கு வருகுது லூசி'



யாழ்.விசேட நிருபர்

பூவரசி மீடியா தயாரிப்பில் உருவாகியிருக்கும் "லூசி" திரைப்படத்தின் முன்னோட்டம் அண்மையில் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றுள்ளது, இத்திரைப்படம் எதிர்வரும் ஜூன் மாதம் 17ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும் மறுநாள் 18ஆம் திகதி வவுனியாவிலும் திரைப்படவுள்ளதாக திரைப்படத்தின் இயக்குனர் ஈழவாணி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை திரைப்பட குழுவினரை அறிமுகப்படுத்தும் நிகழ்வொன்று நடைபெற்றது. அதன் போதே இயக்குனர் திரைப்பட வெளியீடு தொடர்பில் அறிவித்திருந்தார்.

மேலும் தெரிவிக்கையில் ,

இந்த திரைப்படத்தில் அபயன் கணேஷ், பூர்விகா இராசசிங்கம், இதயராஜ், தர்ஷி பிரியா, சுகிர்தன், ஜொனி ஆன்ரன், கௌசி ராஜ், ஆர். ஜே.நெலு, ஷாஷா ஷெரீன் உள்ளிட்ட பலர் நடித்திருக்கின்றார்கள்.

இப்படத்திற்கான ஒளிப்பதிவை ரெஜி செல்வராசா மேற்கொண்டுள்ளதுடன், பத்மயன் சிவா இசையமைத்துள்ளார்.

திரைப்படத்தினை எதிர்வரும் ஜூன் மாதம் 17ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும் , மறுநாள் 18ஆம் திகதி வவுனியாவிலும் திரையிடவுள்ளோம். அதனைதொடர்ந்து இலங்கையின் ஏனைய பாகங்களிலும் திரைப்படத்தினை திரையிட திட்டமிட்டுள்ளோம். அதன் திகதிகளை பின்னர் அறிவிப்போம்.

அத்துடன் , புலம்பெயர் நாடுகளிலும் திரையிட திட்டமிட்டுள்ளோம். அத்தனையும் விரைவில் அறிவிப்போம்

இந்த திரைப்படமானது , உண்மை கதையை தழுவி எடுக்கப்பட்டதோடு. எம்மை சுற்றி நடக்கும் சம்பவங்களில் இருந்து உருவானது. குடும்ப வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றி நிறையவே திரைப்படம் ஊடாக பேசியிருக்கின்றோம்.

இதில் அரசியல் பேச நாங்கள் விரும்பவில்லை. எங்கள் சமூகத்தில் எங்களை சுற்றி நடக்கும் சம்பவங்களை கதையாக்கி படமாக்கி இருக்கின்றோம்.

இலாப நோக்கை கருத்திற் கொண்டோ, புலம்பெயர் தமிழர்களை இலக்கு வைத்தோ, யாரோ ஒரு தரப்பினரை திருப்திப்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் படம் எடுக்கவில்லை.

எனவே எதிர்வரும் ஜூன் 17ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும் 18ஆம் திகதி வவுனியாவிலும் திரையிடவுள்ளதால் எமது மக்களின் ஆதரவை எதிர்பார்க்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இரசாயன மருந்துகளுக்கு தட்டுப்பாடு

சாவகச்சேரி விசேட நிருபர்

மக்கள் நடத்தையில் மாற்றம் ஏற்பட்டால் டெங்கு நோய்ப் பரவலை இலகுவாக கட்டுப்படுத்த முடியுமென சாவகச்சேரி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தெரிவித்தார்.

சாவகச்சேரியில் அண்மையில் இடம்பெற்ற டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இதுதொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது நாட்டில் டெங்கு நோய் நிலைமை அதிகரித்துக் காணப்படுகிறது.

தெளிந்த நீரில் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கக்கூடிய நுளம்புகளின் ஊடாகவே டெங்கு வைரஸ் பரவுகின்றது.

நாம் இந்த நுளம்புகளை கட்டுப்படுத்த எமது சுற்றுப்புற சூழலில் காணப்படுகின்ற நீர் தேங்கக்கூடிய பாத்திரங்களை பாதுகாப்பாக நீர் தேங்காத இடத்திற்கு மாற்றியமைக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் ஊடாகவே நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்தி நோய்ப் பரவலைத் தடுக்க முடியும்.

தற்போது நுளம்புக் கட்டுப்பாட்டுக்கு விசிறும் இரசாயன மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் எமது சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருப்பது முக்கியமானது.

## உழவு இயந்திர விற்பனையில் முன்னணி வகிக்கும் Hayleys Agriculture



கடந்த ஏப்ரல் மாத்தில் (2023) அதிக எண்ணிக்கையிலான உழவு இயந்திர விற்பனையை Hayleys Agriculture பதிவு செய்தது. இது மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் (RMV) பதிவு செய்யப்பட்ட அதிக எண்ணிக்கையான பதிவாகும். அதற்கமைய 2023 ஏப்ரலில் நிறுவனம் சந்தையில் பாரிய ஆதிக்கத்தை செலுத்தியுள்ள அதே நேரத்தில், அதன் உச்சபட்ச சந்தைப் பங்கையும் பெற்றுள்ளது. குபோட்டா மற்றும் இகுபோட்டா வர்த்தக நாமங்களில், மொத்த உழவு இயந்திர பதிவுகளில் 52% பங்கையும், நான்கு சக்கர (4WD) உழவு இயந்திர பிரிவு விற்பனையில் 70.4% பங்குகளையும் நிறுவனம் பதிவு செய்துள்ளது. அதற்கமைய, இவ்வாறான அதிக எண்ணிக்கையிலான வாகனப் பதிவுகள் மற்றும் சந்தைப் பங்கு வீதங்களை பதிவு செய்துள்ளமையானது, இலங்கையில் உள்ள விவசாயிகள் இத்தயாரிப்புகளுக்காக Hayleys Agriculture நிறுவனத்தை தங்களது விருப்பமான விநியோகஸ்தராக தெரிவு செய்கிறார்கள் என்பதை நிரூபிக்கிறது.

## டோக்கியோ சிமெண்ட் குழுமம் ஜனாதிபதி சுற்றுச்சூழல் தங்க விருதை வென்றது



மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஜனாதிபதி சுற்றுச்சூழல் விருதுகள் 202122 இல் டோக்கியோ சிமெண்ட் குழுமம் இரசாயனத் தொழில்கள் பிரிவில் விதிவிலக்கான சுற்றுச்சூழல் உணர்வுள்ள வணிக நடைமுறைகளுக்காக தங்கப் பதக்கத்தை வென்றது. BMICH இல் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் டோக்கியோ சீமெந்து குழுமத்தின் ஆலோசகர் கிறிஸ்டோபர் பெர்னாண்டோவிற்கு ரணில் விக்ரமசிங்க விருது வழங்கினார்.

## 2533ஆவது பசுவை விடுவித்து Abhaya Dannya முயற்சியைத் தொடரும் Maliban



Maliban நிறுவனம், விவசாயிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை மையமாகக் கொண்ட Abhaya Dannya திட்டத்தின் ஒரு பகுதியாக 2533 ஆவது பசுவை கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி பெல்லன்வில ரஜமகா விகாரையில் இடம்பெற்ற நிகழ்வின்போது வழங்கியது. நாட்டின் மிகப்பெரிய உணவு உற்பத்தியாளர்களில் ஒன்று என்ற வகையில், சமூகத்திற்கான அவர்களது அர்ப்பணிப்பு கடந்த ஆண்டில் பெரும் முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. இம் முயற்சியின் மூலம் நோக்கம் மற்றும் இலாபம் ஆகியவை சிந்தனைமிக்க முன்முயற்சிகளுடன் ஒன்றிணைகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த முன்முயற்சியானது 2008 ஆம் ஆண்டு, இந்நிறுவனத்தின் தற்போதைய தலைவர் திரு. ரத்னபால சமரவிக்கிரம அவர்களால், நாட்டின் விவசாயிகளுக்கு ஊக்கம் மற்றும் ஆதரவினை அளிக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. Maliban நிறுவனம், பசுக்கள் கொலை செய்யப்படுவதிலிருந்து காப்பாற்றுவதையும், மீட்கப்பட்ட மாடுகள் நாடு முழுவதும் உள்ள விவசாய குடும்பங்களுக்கு வழங்கப்படுவதையும் உறுதிப்படுத்துகின்றது.

Maliban Milk Products இன் நிதியுதவியுடன், ஒவ்வொரு 100 மெட்ரிக் தொன் பாலுக்கும், ஒரு பசு மாடு ஒரு விவசாயிக்கு வழங்கப்பட உள்ளது. பதிலுக்கு, விவசாயிகள், குறிப்பாக, குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களை சேர்ந்த விவசாயிகள், பால் விற்பனை செய்வதன் மூலம் கூடுதல் வருமானத்தை ஈட்டலாம்.

## தோட்ட மக்களுக்கு புதிதாக 500க்கும் மேற்பட்ட வீடுகள் நிர்மாணிக்கும் திட்டம் மீள ஆரம்பம்

பிராந்திய தோட்ட நிறுவனங்களுக்குச் (RPC) சொந்தமான தோட்டங்களிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இந்த வேலைத்திட்டத்தின் கீழ் 500க்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் முன்பள்ளி சிறுவர்களுக்காக 19 அபிவிருத்தி நிலையங்களை (ECDs) மீண்டும் நிர்மாணிக்க சுமார் 1 பில்லியன் ரூபா ஒதுக்கப்படுமென இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் (PA) அறிவித்துள்ளது.

பெருந்தோட்ட மனித அபிவிருத்தி அறக்கட்டளையின் (PHDT) படி, பெருந்தோட்ட நிறுவனங்கள், தோட்டத் தொழிற்சங்கங்கள் மற்றும் இலங்கை அரசாங்கம் ஆகியன உள்ளடங்கிய முத்தரப்பு நிறுவனம் காலி, இரத்தினபுரி, கண்டி, ஹட்டன் மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் 500 தோட்ட தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு பயனளிக்கும் இந்த வீடமைப்புத் திட்டம் ஆறுமாதங்களில் நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளது.

பெருந்தோட்டங்களில் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட 65,000 வீடுகளில் 44,000 வீடுகள் 1992 ஆம் ஆண்டு தேயிலை தோட்டங்கள் தனியார்மயமாக்கப்பட்டதன் பின்னர் கட்டப்பட்டவையாகும்.



## CMTA காலை உணவு ஒன்றுகூடலின் விருந்தினர் பேச்சாளராக ஜப்பானிய தூதுவர்



தெற்காசியாவின் மிக சிரேஷ்ட வாகன சங்கமான சிலோன் மோட்டார் வாகன வர்த்தகர்கள் சங்கம் (CMTA) கொழும்பு ஹில்டன் ரெசிடென்சிஸ் ஹோட்டலில், தமது பங்குதாரர்களுடனான மற்றுமொரு காலை உணவு ஒன்றுகூடல் மன்றத்தை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் Mizukoshi Hideaki விருந்தினர் பேச்சாளராகக் கலந்துகொண்டதுடன் அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள் மற்றும் மோட்டார் தொழிற்துறையிலுள்ள ஏனைய பங்குதார நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

நுகர்வோர், சூழல் மற்றும் பொருளாதாரத்தை பாதுகாக்கும் வகையில் மோட்டார் வாகன தொழிற்துறையை ஒழுங்குபடுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்து, இலங்கை மோட்டார் வாகன வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் சாரக பெரேரா இங்கு உரையாற்றியிருந்தார். கடந்த சில வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட பல அத்தியாவசியமற்ற இறக்குமதிகளை மேற்கோள் காட்டிய அவர், அவ்வாறான அனைத்து தொழில்துறைகளுக்கும் ஒரு ஒதுக்கீட்டு முறையை கொண்டு வருவது தொடர்பில் அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என்றும், வாகனத் துறைக்கும் இதில் ஒதுக்கீடொன்றை வழங்க வேண்டும் என்றும் பரிந்துரைத்தார். இதன் மூலம் மிக அதிகமாக பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் விலையையும் குறைக்க எனவும். எந்தவொரு பொருளாதாரத்தின் செயற்பாட்டிற்கும் திறனான போக்குவரத்து அவசியம் என்றும், நாட்டில் தற்போதைய வாகனங்களின் எண்ணிக்கையில் 50% ஆனவை 10 வருடங்களுக்கும் மேலாக பயன்படுத்தப்பட்டவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

சாரக பெரேரா மேலும் தெரிவிக்கையில்: “இந்தத் தொழில்துறைகளுக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையின் அடிப்படையில், அத்தொழில்துறைகளில் சிலவற்றின் 2020 மற்றும் 2021 ஆகிய இரண்டு நாட்காட்டி வருடங்களுக்கான இறக்குமதிச் செலவினங்களை வெளிப்படுத்த விரும்புகிறேன். தைத்த ஆடைகள் மற்றும் அணிகலன்களை இறக்குமதி செய்ய 421 மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன. வீட்டு பயன்பாட்டுப் பொருட்கள் மற்றும் தளபாடங்களுக்கு 739 மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன. கடல் உணவுக்கு 310 மில்லியன் டொலர்களும், அழகுசாதனப் பொருட்கள் மற்றும் கழிப்பறைகளுக்கு 122 மில்லியன் டொலர்களுமென என இறக்குமதி செலவு பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது.

இந்த 4 வகை இறக்குமதிகளுக்கான மொத்த அந்நியச் செலாவணி வெளியேற்றம் மாத்திரம் கடந்த இரண்டு வருடங்களில் 1,592 மில்லியன் டொலர்களாக ஆகும். எனவே, இந்தத் தொழில்துறைகளில் பெரும்பாலானவற்றுக்கு ஒதுக்கீட்டு முறை இருப்பது அவசியமாகும். அது நாம் உட்பட அனைவரையும் வாழ அனுமதிக்கும் என நாம் நம்புகிறோம்.

## 13 SLI விருதுகளை வென்ற செலிங்கோ லைஃப்



செலிங்கோ லைஃப்பின் விற்பனை வல்லுநர்கள் அண்மையில் இடம்பெற்ற SLIM தேசிய விற்பனை விருது வழங்கும் நிகழ்வில் சிறந்த விற்பனை செயற்திறனுக்காகவும் ஏனைய சாதனைகளுக்காகவும் மூன்று தங்கம், மூன்று வெள்ளி, மற்றும் ஏழு வெண்கலம் உள்ளிட்ட 13 விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்தின் தேசிய விற்பனை விருதுகள் முன்னர் SLIM தேசிய விற்பனை காங்கிரஸ் விருதுகள் என அறியப்பட்டது. அண்மையில் இடம்பெற்ற விருது வழங்கும் நிகழ்வின் போது 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளீடுகளின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டது.

செலிங்கோ லைஃப்பின் விற்பனைக் குழு 2020 ஆம் ஆண்டில் ஆயுள் காப்புறுதிப் பிரிவில் அவர்களது செயற்திறனுக்காக ஏழு விருதுகளை வென்றது. செலிங்கோ லைஃப்பின் வெள்ளவத்தை கிளையின் திரு கே. ஸ்ரீகரன் விற்பனை நிறைவேற்று பிரிவில் வென்ற ஒரு தங்க விருதும், விற்பனை முகாமையாளர் பிரிவில் தலைமை அலுவலகத்திலிருந்து திரு ஏ.எச்.எம். ரிஹாமுக்கு மற்றொரு தங்க விருதும் இதில் அடங்கும். மேலும், ஆனமடுவ கிளையின் திரு.ஆர்.எம்.பி.என். பி.கே.ரத்னமாலா விற்பனை நிறைவேற்றுப் பிரிவிலும் வெள்ளி விருதை வென்றார். வெண்கல விருதுகள் பிராந்திய விற்பனை முகாமையாளர் பிரிவில் மாத்தறை மற்றும் அக்குரஸ்ஸ பிராந்தியத்தைச் சேர்ந்த திரு.ஆர்.பி.எல். தம்மிக்கவுக்கும், பிரதேச முகாமையாளர் பிரிவில் பன்னல கிளையைச் சேர்ந்த திரு. எஸ்.ஏ.எஸ்.ஆர். சேனநாயக்காவுக்கும், விற்பனை நிறைவேற்று அதிகாரி பிரிவில் பன்னல கிளையைச் சேர்ந்த திரு.ஏ.கே. தேவிந்தவுக்கும், பிரண்ட் லைனர்ஸ் பிரிவில் நெல்லியடி கிளையின் திரு.கே. குருஷாந்த் அவர்களுக்கும் வழங்கப்பட்டன.

## ஒரு வருட மைல்கல்லை எட்டிய Granbell Hotel Colombo



இலங்கையின் பரபரப்பான தலைநகரின் மையப்பகுதியில் உள்ள ஜப்பானியருக்கு சொந்தமான ஹோட்டலான Granbell Hotel Colombo, சமீபத்தில் அதன் முதலாவது வருட நிறைவு விழாவை சிறப்பாக கொண்டாடியது.

Granbell Hotel Colombo வின் ஆண்டு விழாவில், Belluna Co. Ltd நிறுவனத்தின் தலைவர் Kiyoshi Yasuno, பணிப்பாளர் Hiroshi Yasuno ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். Belluna Japan பணிப்பாளர் Junko Kato, Belluna Lanka பங்குதாரரான நிஷாந்த பெரேரா, SLITHM தலைவர் ஷிரந்த பீரிஸ் உள்ளிட்ட மதிப்பிற்குரிய அதிதிகள் மற்றும் பிரமுகர்களும் இதில் கலந்து கொண்டனர்.

பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும், Granbell Hotel Colombo ஆனது, அவை அனைத்தையும் தாண்டி 2022 ஏப்ரலில் அதன் கதவுகளைத் திறந்தது. நவம்பர் முதல் 40% இற்கும் அதிக தங்குமிட வசதியை ஹோட்டல் பேணி வந்தது. இதற்காக இலங்கை அரசாங்கம், இலங்கை சுற்றுலா, பயண முகவர்கள், கூட்டாளர்கள், மற்றும் வெளிநாட்டு சுற்றுலா முகவர்கள், பெருநிறுவனங்கள் வழங்கிய பாரிய ஆதரவிற்கு ஹோட்டல் நிர்வாகம் நன்றி தெரிவித்துள்ளது. Granbell Hotel Colombo ஆனது, டில்லியில் இடம்பெற்ற SATTE 2023 சுற்றுலா கண்காட்சியிலும் துபாயில் இடம்பெற்ற Arab Travel Mart இலும் பங்கேற்றது. அங்கு அதன் உலகத் தரம் வாய்ந்த வசதிகள் மற்றும் எல்லையற்ற சேவைகளை அது காட்சிப்படுத்தியிருந்தது. இலங்கையின் சுற்றுலாத் துறையை மேலும் மேம்படுத்தும் வகையில் எதிர்வரும் வருடத்தில் World Travel Mart உள்ளிட்ட பல்வேறு சுற்றுலா கண்காட்சிகளிலும் கலந்து கொள்ள ஹோட்டல் எதிர்பார்த்துள்ளது.

## 30வது கிரேஷியன் பரிசுக்கான இறுதிப்பட்டியல் அறிவிப்பு

ஜோன் கீ ல்ஸ் அறக்கட்டளையுடன் இணைந்து கிரேஷியன் அறக்கட்டளை மற்றும் அதன் நிகழ்வுக் கூட்டாளரான பிரிட்டிஷ் கவுன்சிலின் ஆதரவுடன், 30வது கிரேஷியன் பரிசுக்கான இறுதிப் பட்டியல் விபரத்தை அறிவித்துள்ளதுடன், மே 17 அன்று Gratiaen Trust Young Writers Club என்ற கிரேஷியன் அறக்கட்டளை இளம் எழுத்தாளர்கள் கழகத்தின் அங்குரார்ப்பணமும் இடம்பெற்றுள்ளது. இந்த ஆண்டு எட்டு எழுத்தாளர்கள் கொண்ட நீண்ட பட்டியலில், நான்கு பேர் போட்டியின் அடுத்த கட்டத்திற்கான இறுதிப் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு:

இசுருணி அனுராதா மல்லவாராச்சியின் Flowers Teach Me To Let Go (கவிதை), சிரந்தி ராஜபக்ஷவின் Keeping Time and Other Stories (சிறுகதைகள்), ஷிராணி ராஜபக்ஷவின் Samsara (கவிதை) மற்றும் யுதஞ்சய விஜேரத்னவின்The Wretched and the Damned (நாவல்).

இந்த ஆண்டு கிரேஷியன் பரிசு அதன் 30 வது ஆண்டைக் குறித்து நிற்பதுடன், ஆங்கில மொழியில் இலங்கை எழுத்தாளர்களை அங்கீகரித்து ஊக்குவிப்பதில் தகர்க்கப்படாத சாதனையாக மாறியுள்ளது. இந்த ஆண்டு பரிசுத் தெரிவுக்கான நடுவர் குழுவின் தலைவராக சர்வதேச அளவில் புகழ்பெற்ற எழுத்தாளரான ரொமேஷ் குணசேகர செயல்பட்டதுடன், அவர் புக்கர் பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டவர் என்பதுடன், றோயல் இலக்கிய சங்கத்தின் அங்கத்தவரும் ஆவார். தொழில் ரீதியாக ஒரு உளவியல் நிபுணரும், முன்னாள் ஆசிரியரும், தீவிர இலக்கிய வாசகருமான சுகன்யா விக்னராஜா மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும், மொழியியல் மற்றும் இலக்கியம் ஆகியவற்றில் வியாபித்துள்ள ஆராய்ச்சி ஆர்வங்களையும் கொண்ட கௌசல்யா பெரேரா ஆகியோரும் நடுவர் குழுவில் இடம்பெற்றுள்ளனர். இக்குழுவில் இடம்பெற்றுள்ள நடுவர்கள் ஒரு படைப்பாற்றல் எழுத்தாளர், தகவலறிந்த பொது வாசகர் மற்றும் கல்விமான் என மூன்று கோணங்களில் கிரேஷியன் பரிசின் நீண்டகால பாரம்பரியத்தை பிரதிபலிக்கின்றனர்.



## நவீன மார்பகப் புற்றுநோயைக் கண்டறியும் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் Hemas

இலங்கையிலுள்ள பெண்களிடையே மார்பகப் புற்றுநோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பிற்கு பிரதிபலிக்கும் வகையில், இலங்கையின் முன்னணி தனியார் மருத்துவமனை சேவை வலையமைப்பான ஹேமாஸ் மருத்துவமனை குழுமம், அண்மையில் இலங்கைக்கு Selenia Dimensions mammography தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியது. இதன் மூலம் இலங்கையிலுள்ள பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் நிலைமைகளை மிகத் துல்லியமாக முன்கூட்டியே கண்டறிய முடியும் என்பதுடன், மார்பகப் புற்றுநோயிலிருந்து முழுமையாக விடுபடுவதற்கு அல்லது அதனை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்துவதற்கு இது வாய்ப்பளிக்கும்.

புற்றுநோய் மனித மரணத்திற்கு முக்கிய காரணமாக கருதப்படுகிறது மற்றும் தரவுகளின்படி, மார்பக புற்றுநோயானது பெண்களிடையே மிகவும் பொதுவான வகை புற்றுநோயாகும். உலக சுகாதார அமைப்பின் (WHO) கூற்றுப்படி, 2020 இல் இலங்கையில் பதிவான மொத்த புற்றுநோயாளிகளில் 13.4% மார்பக புற்றுநோயாளிகள், கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அனைத்து பெண்களில் 25.7% பேர் மார்பக புற்றுநோயாளிகள் மற்றும் 2020இல் மொத்த மார்பக புற்றுநோயாளிகளின் எண்ணிக்கை 3,975 ஆக இருந்தது. இலங்கையில் அத்தியாவசிய வசதிகள் இல்லாமை மற்றும் மார்பக புற்றுநோய் பற்றிய அறியாமை காரணமாக, நாட்டில் மார்பக புற்றுநோயாளிகளின் இறப்பு விகிதம் 42.5% ஆக உயர்ந்துள்ளது.

உலகளவில், 2020 ஆம் ஆண்டில் 2.26 மில்லியனுக்கும் அதிகமான மார்பக புற்றுநோய்கள் பதிவாகியுள்ளன, இது உலகளவில் பதிவான அனைத்து புற்றுநோய்களில் 12.5% ஆகும். மார்பக புற்றுநோயானது பெண்களில் மிகவும் பொதுவான புற்றுநோயாகும் மற்றும் ஒட்டுமொத்தமாக மிகவும் பொதுவான புற்றுநோயாக இருக்கலாம். மேலும், உலக சுகாதார அமைப்பின் (WHO) தரவுகளின்படி, மார்பக புற்றுநோயால் 30.3% இறப்பு விகிதம் உள்ளதுடன் மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெண்கள் எதிர்கொள்ளும் ஆபத்து, இது பெண்களிடையே பதிவாகும் அனைத்து புற்றுநோய்களிலும் 25.8% ஆகும்.

பெரும்பாலான வளர்ந்த நாடுகளில், மார்பக புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சையளிப்பது மேம்பட்ட நிலையில் உள்ளது. நாட்டில் மார்பகப் புற்றுநோயின் வளர்ச்சியைக் காட்டும் இலங்கையில் நோயை முன்கூட்டியே கண்டறிவதற்கான தொழில்நுட்பம் போதுமானதாக இல்லாததால் சுகாதாரத்துறை ஒரு சவாலை எதிர்கொண்டுள்ளது.



தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2023 மே 27 சனிக்கிழமை

# இலங்கையின் அனைத்து வகை கிரிக்கெட் அணிகளுக்குமான புதிய ஆடை அறிமுகம்




இலங்கை கிரிக்கெட் அணிக்கான உத்தியோகபூர்வ ஆடை அனுசரணையாளராக தேர்வு செய்யப்பட்டிருக்கும் மூஸ் ஆடை நிறுவனம் இலங்கை கிரிக்கெட் அணிக்காக புதிய ஆடையை அறிமுகம் செய்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபையுடனான புதிய கூட்டாண்மையின் கீழ் சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் மற்றும் ஆசிய கிரிக்கெட் கௌன்சில் போட்டிகள் உட்பட அனைத்து வகை கிரிக்கெட்டுக்குமான இலங்கை தேசிய அணியின் ஆடைகளை மூஸ் நிறுவனம் வழங்கவுள்ளது.

இதன்படி எதிர்வரும் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான இலங்கை ஒருநாள் அணி ஜெர்சி அறிமுக நிகழ்வு கடந்த வியாழக்கிழமை (25) கொழும்பில் இடம்பெற்றது.

புதிய ஜெர்சியானது, விளையாட்டில் மிக உயர்ந்த அளவில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப துணிகளை இணைத்து, வீரரின் செயல்திறனை மேம்படுத்துவதற்கும், இயக்கத்தை எளிதாக்குவதற்கும் வடிவமைக்கப்பட்ட துணியின் முழுமையான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பகுப்பாய்வைத் தொடர்ந்து வடிவமைக்கப்பட்டுள்ளது.

துணியின் உட்புறம் தோலில் இருந்து ஈரப்பதத்தை இழுக்கவும், வெளிப்புற அடுக்குக்கு மாற்றவும் உதவும், அதே நேரத்தில் வெளிப்புறம் உலர் நேரங்களுக்கு தாக்குப்பிடிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்ச்சியான ஆவியாதல் செறிவூட்டலைத் தடுப்பதோடு சூடான மற்றும் குளிர் நிலைகளில் வெப்பநிலையை ஒழுங்குபடுத்துகிறது. இந்தத் துணி மிக இலேசாக இருப்பது வீரர்களுக்கு கூடுதல் நன்மையாக அமையும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த புதிய ஆடைகள் இலங்கை ஒருநாள், டெஸ்ட் மற்றும் மகளிர் கிரிக்கெட் அணிக்கு பயன்படுத்தப்படும். பாடசாலை கிரிக்கெட் வீரர்களைப் மையப்படுத்தி ஆடை காட்சிப்படுத்தப்பட்டது.

இலங்கை டெஸ்ட் அணித்தலைவர் திமுத் கருணாரத்ன, இந்த ஆடையை முதலில் மகளிர் அணி தலைவர் சாமரி அத்தபத்துவிடம் வழங்கினார்.

இந்நிகழ்வில், இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் மொஹான் டி சில்வா, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் அஷ்லி டி சில்வா, மூஸ் அதிகாரிகள் மற்றும் கிரிக்கெட் வீரர்களும் கலந்துகொண்டனர்.

# ஐ.பி.எல் இறுதிப் போட்டியில் ஆடுவதில் தோனிக்கு சிக்கல்



இந்திய பிரீமியர் லீக் இறுதிப் போட்டியில் விளையாட தோனிக்கு தடை விதிக்கப்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

முதல் தகுதிச் சுற்றின் போது அவர் வேண்டுமென்றே நேரத்தை வீணடித்தார் என கூறப்படுகிறது. ஐ.பி.எல் கிரிக்கெட்டின் முதலாவது தகுதி சுற்றில் குஜராத்தை தோற்கடித்து சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

இந்தநிலையில், குஜராத்– சென்னை அணிகளுக்கு இடையே நடைபெற்ற போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் மாற்று வீரராக வேகப் பந்து வீச்சாளர் பதிரண சேர்க்கப்பட்டார்.

அவர் ஒரு கட்டத்தில் மைதானத்தை விட்டு வெளியேறி 9 நிமிடங்கள் கழித்து மீண்டும் வந்தார். அவரை பந்துவீச அணித் தலைவர் தோனி அழைத்த போது, நடுவர் தடுத்து நிறுத்தினார். இப்போது தான் அவர் களத்திற்கு வந்திருக்கிறார், உடனடியாக அவரை பந்து வீச அனுமதிக்க முடியாது என்று நடுவர் கூறியுள்ளார்.

இதனால் அதிருப்திக்குள்ளான தோனி மற்றும் சக வீரர்கள் நடுவரிடம் சில நிமிடங்கள் வாதிட்டனர். பின்னர் நடுவரின் ஒப்புதலுடன் அந்த ஓவரை பதிரண வீசினார். இந்த காரசார விவாதங்கள் நடந்து முடிய எட்டு நிமிடங்கள் ஏற்கனவே முடிந்துவிட்டது. பின் பதிரண பந்து வீச அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில், ஐ.பி.எல் இறுதிப் போட்டியில் விளையாட சென்னை சுப்பர் கிங்ஸ் அணித் தலைவர் தோனிக்கு தடை விதிக்கப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. நடுவர்கள் தோனி மீது குற்றம் சாட்டினால் அவர் இறுதி போட்டியில் விளையாடாமல் போவதற்கு அதிகம் வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே ஒருமுறை மெதுவாக பந்து வீசியதற்கு தோனிக்கு அபராதம் விதிக்கப்பட்டது. அவர் நாளை (28) அஹமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி அரங்கில் நடைபெறும் இறுதிப் போட்டியில் விளையாட முடியாமல் போக வாய்ப்பு உள்ளது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் விதியின்படி நடுவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டால் அடுத்த போட்டியில் விளையாட மறுக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

## ஆப்கானுக்கு எதிரான ஒருநாள் தொடர்:

# இலங்கை அணியை தேர்வு செய்ய தசுனின் வருகைக்காக காத்திருப்பு



ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான இலங்கை குழாத்தை தீர்மானிப்பதற்கு இலங்கை அணித் தலைவர் தசுன் ஷானக்க நாடு திரும்பும் வரை இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழுவினர் காத்துள்ளனர்.

31 வயது சகலதுறை வீரரான தசுன் ஷானக்க இந்திய பிரீமியர் லீக்கில் குஜராத் டைடன்ஸ் அணியில் இடம் பெற்றுள்ளார்.

“தேர்வாளர்கள் இன்னும் அணியை இறுதி செய்யவில்லை. அணித் தலைவர் ஷானக்க கூட்டத்தில் பங்கேற்பதற்காக காத்துள்ளனர்” என்று இது தொடர்பில் நெருக்கமான வட்டாரம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

“அவருடன் டெலி கொன்பிரன்ஸ் மூலம் ஆலோசனை பெற முடியும் என்றபோதும் நாம் உலகக் கிண்ண தகுதி காண் போட்டியில் ஆட வேண்டி இருக்கும் சூழலில், அவரது நேரடி பங்கேற்பு முக்கியமானது என்று தேர்வாளர்கள் நம்புகின்றனர்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

குஜராத் டைடன்ஸ் அணி நேற்று (26) ஐ.பி.எல் தொடரின் இரண்டாம் தகுதிச் சுற்றில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிராக ஆடியது. இந்நிலையில் தசுன் ஷானக்க ஓரிரு நாட்களில் நாடு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

“இலங்கை அணி வரும் திங்கட்கிழமை (29) ஹம்பாந்தோட்டைக்கு புறப்பட்டுச் செல்லவுள்ளது. ஷானக்க வந்த உடன் நாம் அணியை இறுதி செய்வோம்” என்று அந்த வட்டாரம் கூறியது.

குசல் ஜனித் பெரேரா உபாதையில் இருந்து முழுமையாக குணமடையாத நிலையில் அவர் முன்னர் அறிவிக்கப்பட்ட 30 பேர் கொண்ட உத்தேச அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

25 வயதான ஆரம்ப துடுப்பாட்ட வீரர் பத்தும் நிசங்கவும் அண்மையில் உபாதைக்கு உள்ளான நிலையில் அவரும் தனது காயத்தில் இருந்து மீண்டு வருவதாக தெரியவருகிறது.

மூன்று தேர்வுக் குழு உறுப்பினர்களும் தமது பணிகளில் ஈடுபட்டு வருவதோடு அதன்படி ரொமேஷ் களுவிதாரண மூன்று ஒருநாள் தொடருக்காகவும் ஹம்பாந்தோட்டை செல்வதற்கும் தேர்வுக் குழு தலைவர் பிரமோத்ய விக்ரமசிங்க சிம்பாப்வே சுற்றுப்பயணம் மேற்கொள்ளவும் வாய்ப்பு இருப்பதாக தெரியவருகிறது.

உலகக் கிண்ண தகுதிகாண் போட்டி அடுத்த மாதம் சிம்பாப்வேயில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தென்னாபிரிக்க அணிக்கு எதிரான இலங்கை ஏ அணியின் தொடருக்காக ஹேமந்த விக்ரமரத்ன கண்டி செல்லவுள்ளார்.

இதில் இலங்கை ஏ அணிக்கு புதிய அணித் தலைவர் ஒருவர் நியமிக்கப்பட வாய்ப்பு உள்ளது. கமிந்து மெண்டிஸ் டெங்குவால் பாதிக்கப்பட்டிருப்பதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

# விளையாட்டு ஆடை வழங்கல்

மாளிகைக்காடு குறூப் நிருபர்



கற்பிட்டி கோட்டத்திற்குட்பட்ட பள்ளிவாசல்துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 2015ஆம் ஆண்டு கல்வி கற்று வெளியேறிய பழைய மாணவர்களால் பாடசாலைக்கு விளையாட்டு சீருடை அன்பளிப்புச் செய்யப்பட்டது. பாடசாலை உடற்கல்வித்துறை ஆசிரியர் எஸ்.ஐ.எம். அம்ஜத் பழைய மாணவர்களிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்து பள்ளிவாசல்துறை முஸ்லிம் மாகா வித்தியாலத்தின் விளையாட்டுத்துறையினை மேம்படுத்தும் நோக்கமாக 2015ஆம் ஆண்டு பழைய மாணவர்களால் ஒரு தொகை விளையாட்டுச் சீருடைகள் அண்மையில் கல்லூரி அதிபர் எம்.எச்.யூ. பரீதாவிடம் அதிபர் காரியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டது.




திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.சி.எம். ஜவாஹிர் நிதி உதவியில் கந்தளாய் அல் ஜாயா விளையாட்டு கழகத்துக்கு சீருடை அன்பளிப்பாக வழங்கப்பட்டபோது பிடிக்கப்பட்ட படத்தினை காணலாம்.
(படம்: கந்தளாய் தினகரன் நிருபர்)

# மான். யுனைடட் அணி சம்பியன்ஸ் லீக் தகுதி



செல்சி அணியை 4–1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி பிரீமியர் லீக்கில் முதல் நான்கு இடங்களுக்குள் முன்னேறிய மான்செஸ்டர் யுனைடட் சம்பியன்ஸ் லீக் தொடருக்கு தகுதி பெற்றுள்ளது. ஓல்ட் டிரபர்டில் கடந்த வியாழக்கிழமை (25) நடைபெற்ற போட்டியில் சம்பியன்ஸ் லீக் தகுதிக்கு ஒரு புள்ளியை மாத்திரமே பெற வேண்டிய நிலையில் மான்செஸ்டர் யுனைடட் முதல் பாதியில் 2–0 என முன்னிலை பெற்றதோடு போட்டி முடியும் வரை தனது ஆதிக்கத்தை தக்கவைத்துக் கொண்டது.

ஆட்டத்தில் யுனைட்டுக்கு கசிமிரோ, ஆன்ட்டனி மார்ஸியால், புருனோ பெர்னாண்டஸ், மார்க்கஸ் ரெஷ்பர்ட் ஆகியோர் கோலடித்தனர்.

யுனைட்டின் வெற்றியைக் கொண்டாடிய அணித் தலைவர் எரிக் டென் ஹாக் “இந்த அணி சம்பியன்ஸ் லீக்கிற்கு சொந்தமானது” என்று பெருமிதத்துடன் கூறியுள்ளார். இப்பருவ பிரீமியர் லீக்கில் யுனைட்டுக்கு இன்னும் ஓர் ஆட்டம் எஞ்சியுள்ளது. 3ஆம் இடத்தைத் தக்க வைத்துக்கொள்ள கடைசி ஆட்டத்தில் யுனைடட் கட்டாய வெற்றிக்காகப் போராட வேண்டும்.

# பங்களாதேஷை வீழ்த்தியது இலங்கை கரப்பந்து அணி



நேபாளத்தில் நடைபெற்று வரும் மத்திய ஆசிய கரப்பந்தாட்ட சம்மேளன மகளிர் கரப்பந்தாட்ட சவால் கிண்ணத்தில் கடந்த வியாழனன்று (25) நடைபெற்ற 5 முதல் 8ஆம் இடங்களை உறுதிசெய்யும் போட்டியில் இலங்கை அணி 3–0 என வெற்றியை பதிவுசெய்தது.

பங்களாதேஷ் மகளிர் அணிக்கு எதிரான இந்தப் போட்டியின் முதல் செட்டை இலங்கை அணி இலகுவாக கைப்பற்றியது. ஆரம்பத்திலிருந்து முன்னிலையை காட்டிய இலங்கை மகளிர் அணி 25–16 என்ற புள்ளிகள் கணக்கில் முதல் செட்டை கைப்பற்றியது.

தொடர்ந்து அபாரமாக ஆடிய இலங்கை மகளிர் அணி இலகுவான முறையில் முன்னேறியது. இரண்டாவது செட்டை 25–15 எனவும், மூன்றாவது செட்டை 25–07 எனவும் இலகுவாக கைப்பற்றி 3–0 என வெற்றியை பதிவுசெய்தது. இந்தப் போட்டியில் வெற்றிபெற்ற இலங்கை அணி 5ஆவது இடத்தை தீர்மானிக்கும் போட்டியில், இன்று (27) கிரிகிஸ்தான் அணியை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டெஸ்ட் சம்பியன்சிப் பரிசு விபரம் அறிவிப்பு



2021–23 பருவத்திற்கான உலக டெஸ்ட் சம்பியன்சிப் தொடரில் பங்கேற்ற ஒன்பது அணிகளுக்கும் 3.8 மில்லியன் டொலர் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் அறிவித்துள்ளது.

லண்டன் ஓவல் மைதானத்தில் வரும் ஜூன் 7 ஆம் திகதி ஆரம்பமாகும் உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய மற்றும் இந்திய அணிகள் மோதவுள்ளன. இதன்படி சம்பியன் கிண்ணத்தை வெல்லும் அணி அதிகபட்சமாக 1.6 மில்லியன் டொலர்களை கைப்பற்றவுள்ளதோடு இரண்டாம் இடத்தைப் பிடிக்கும் அணி 800,000 டொலர்களை வெல்லும்.

இதில் உலக டெஸ்ட் சம்பியன்சிப்பில் மூன்றாம் இடத்தை பிடித்த தென்னாபிரிக்க அணி 450,000 அமெரிக்க டொலர்களை தட்டிச் செல்லவுள்ளது. நான்காவது இடத்தை பிடித்த இங்கிலாந்து அணிக்கு 350,000 டொலர்களும், ஐந்தாவது இடத்தை பிடித்த இலங்கைக்கு 200,000 டொலர்களும் பரிசாக கிடைக்கவுள்ளது. எஞ்சிய அணிகளான நியூசிலாந்து (6ஆவது இடம்), பாகிஸ்தான் (7ஆவது இடம்), மேற்கிந்திய தீவுகள் (8ஆவது இடம்) மற்றும் பங்களாதேஷ் (9அவது இடம்) தலா 100,000 டொலர்களை பெறும்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மே மாதம் 27ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.